சுவடி : 43
ஏடு : 5
நவம்பர் 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.


தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# பார்ப்பனப் புரோகிதம் ஒழிக!

## *DOWN WITH BRAHAMIN PRIEST CRAFT*



உலகத்தில் பல மதங்கள் உள்ளன. அவற்றுள் இந்து மதம் மூத்தது. அடுத்து மூத்த மதங்கள் சமணம், பௌத்தம் ஆகியவை. இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னர்த் தோன்றியது கிறித்துவ மதம். 1450ஆம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியது இசுலாம் மதம்.

ஒவ்வொரு மதத்திலும் புரோகிதம் உண்டு; புரோகிதர்கள் இருக்கிறார்கள்.

இன்று உலகத்தில் பெரிய எண்ணிக்கையில் உள்ளவர்கள் கிறித்துவர்கள். அவர்கள் கிராமப் பாதிரி, மாதா கோவில் பாதிரி முதலான புரோகிதப் பணிக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். குறிப்பிட்ட கல்விப் பயிற்சி உள்ளவர் மட்டுமே கிறித்துவப் புரோகிதர் ஆகமுடியும்; அதாவது பாதிரியார் ஆகமுடியும்.

அதேபோல் இசுலாம் மதத்தில் பாதிரியாக வர விரும்புகிறவர், ஏழு ஆண்டுகள் அரபுக் கல்லூரியில் பயிற்சி பெறவேண்டும். அவர்களே திருமணங்கள் மற்றும் இஸ்லாமியர் வீடுகளில் வீட்டுச் சடங்குகளைச் செய்யமுடியும்; மசூதியில் அவர்களே குர்-ஆனை ஓதமுடியும்.

இதேபோல் பௌத்த மதத்திலும் பிட்சுவாகச் செயல்படக் குறிப்பிட்ட மதக் கல்வி பெற வேண்டும். அதேபோல் சமண மதத்திலும் உண்டு.

**ஆனால் இந்து மதத்தில் மட்டும், எந்த மதக் கல்வியும் பெறாமல் பிறவி காரணமாக-பார்ப்பானாகப் பிறந்த எவனும் மதகுரு ஆகமுடியும்; புரோகிதனாகச் செயல்பட முடியும்.**

இந்தியாவில் உள்ள ஏறக்குறைய 115 கோடி இந்துக்கள் - பார்ப்பானை மட்டுமே மத குருவாக - புரோகிதனாக - திருமணச் சடங்குகளைச் செய்பவனாக - கோவில் அர்ச்சகனாக - ஈமச் சடங்குகளைச் செய்பவனாக ஏற்றுச் செயல்பட முடியும்.

இந்த முறையை அடியோடு மாற்ற வேண்டுமானால், இந்துச் சட்டம் முழுவதையும், அதில் உள்ள பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற பிறவி வருண வேறுபாடுகளையும் அடியோடு ஒழிக்க வேண்டும். இதுவே பெரியாரின் குறிக்கோளாகும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1968இல் செய்யப்பட்ட திருமணச் சட்டம் யாரைக் கட்டுப்படுத்தும்? தமிழ்நாட்டில் உள்ள இந்துக்கள் மட்டுமே சுயமரியாதைத் திருமணச் சட்டப்படித் திருமணம் செய்துகொள்ள முடியும். மற்ற மாநிலங்களில் உள்ள இந்துக்களோ, வெளிநாடுகளில் உள்ள இந்துக்களோ - "தமிழ்நாடு 1968ஆம் ஆண்டைய சுயமரியாதைத் திருமணச் சட்டப்படித் திருமணம் செய்து கொள்ள முடியாது." ஏன்?

**இந்துச் சட்டம் இந்தியா முழுவதற்குமானது. அதனால், சுயமரியா தைத் திருமணச் சட்டம் தமிழ்நாட்டு எல்லைக்குள் மட்டுமே செல்லு படியாகும்.**

1968 முதல் கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் எத்தனை விழுக்காடு திருமணங்கள் சுயமரியாதைத் திருமணச் சட்டப்படி செய்து கொண்டார்கள் என்று கணக்கு எடுக்கப்படவில்லை. அதைத் தமிழ்நாட்டு அரசாங்கம்தான் செய்ய வேண்டும்.

ஆனால் தி.மு.க. ஆட்சியோ, அ.தி.மு.க. ஆட்சியோ அந்தப் பணியைச் செய்யவில்லை.

மேலும் திருமண நிகழ்ச்சி மட்டுமே பார்ப்பானைக் கொண்டு செய்யப்படவில்லை. மற்றும் சீமந்தம் (கருக்கொள்ளுதல்), குழந்தை பிறந்தால் புண்ணிய வசனம் செய்தல் குழந்தைக்குப் பெயர் வைத்தல், குழந்தைக்கு முடி இறக்குதல், காதணி விழா செய்தல், திருமண வினை நடத்துதல் முதலான எல்லாச் சடங்கு களையும் நூற்றுக்கு நூறு இந்துக்களும் செய்யா விட்டாலும் - பெரும்பாலோர் பார்ப்பனப் புரோகிதனை வைத்தோ செய்கிறார்கள்.

ஒரு இந்து இறந்துவிட்டால் அவருக்கு ஈமச்சடங்கு அல்லது கருமாதி நடத்துதல், ஆண்டுதோறும் திதி கொடுத்தல் முதலான சடங்குகளுக்கும் பார்ப்பனப் புரோகிதனே அழைக்கப்படுகிறான். மற்றும் ஒவ்வொரு குடும்பத்திலும் நடைபெறும் வீடு கட்ட அடிப்படை போடு தல், கிணறு தோண்ட மனை கோலுதல் முதலான எல்லாச் சடங்குகளும் பார்ப்பனப் புரோகிதனைக் கொண்டே செய்யப்படுகின்றன.

எனவே, பார்ப்பனப் புரோகிதம் அடியோடு சட்டப்படி ஒழிக்கப்படுகிற வரையில், பார்ப்பனனுக்கு இந்து சமூகத்தில் உள்ள உயர்வும், மரியாதையும், ஒருவன் சாகிற வரையில், சடங்கின் பேரால் பார்ப்பனன் வசூல் பண்ணுகிற உரிமையும் ஒழியாது என்பதை நல்ல சுயமரியாதைக்காரர்கள் உணரவேண்டும் என அன்போடு வேண்டுகிறேன்.

**01.11.2018** **- வே. ஆனைமுத்து**

# கல்யாண விடுதலை

ஆண், பெண் கல்யாண விஷயத்தில் அதாவது, புருஷன் - மனைவி என்ற வாழ்க்கையானது நமது நாட்டில் உள்ள கொடுமையைப்போல் வேறு எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது என்று சொல்ல லாம். நமது கல்யாணத் தத்துவம் எல்லாம் சுருக்க மாய்ப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமை யாகக் கொள்வது என்பதைத் தவிர, வேறு ஒன்றுமே அதில் இல்லை. அவ்வடிமைத்தனத்தை மறைத்துப் பெண்களை ஏமாற்றுவதற்கே சடங்கு முதலியவைகள் செய்யப்படுவதோடு, அவ்விதக் கல்யாணத்திற்குத் தெய்வீகக் கல்யாணம் என்பதாக ஒரு அர்த்தமற்ற போலிப் பெயரையும் கொடுத்துப் பெண்களை வஞ்சிக் கின்றோம்.

- பெரியார் ஈ.வெ.ரா

# தமிழ்த்தேசிய பெரும்புலவர் கி.த.பச்சையப்பன் அவர்களின் நினைவேந்தல் - படத்திறப்பு




புலவர் கி.த.பச்சையப்பன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி சென்னை, சேப்பாக்கம் நிருபர் சங்க அரங்கில் 11.10.2018 வியாழன் மாலை 4.30 முதல் 8.15 வரை புலவர் இரத்தினவேலன் தலைமையில் நடை பெற்றது. காஞ்சி அமுதன் வரவேற்புரையாற்றினார். கி.த.ப. அவர்களின் படத்தை வே. ஆனைமுத்து திறந்து வைத்து உரையாற்றினார். தியாகு, மா. பூங்குன்றன், பொழிலன், க. அருணபாரதி, பா. இறைஎழிலன், பிரபா கல்விமணி, இயக்குநர் வ. கவுதமன், பேராசிரியர் ப. சிவக்குமார், செ.ப.முத்தமிழ்மணி, சோழன் நம்பியார், சந்திரசேகர் ஆகியோர் கி.த.ப.அவர்களின் ஒப்பரிய பணிகளை நினைவுகூர்ந்து உரையாற்றினர். வாலாசா வல்லவன் நன்றி கூறினார்.

# தமிழர் அறநெறிக் கழகம் 37ஆம் ஆண்டு தமிழ் விழா

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா அவர் களை நினைவூட்டும் தமிழ்க் குழந்தைகள் தினவிழா

ஆழமான தமிழ்ப் பற்றும் அசைக்க முடியாத இனவுணர்வும் கொண்ட தமிழர் அறநெறிக் கழகத்தின் நிறுவனர் தமிழ்மாமணி கோ. கலைச்செல்வன் அவர்களின் பெயரால் அளிக்கப்பட்ட கலைச்செல்வன் விருதையும் பணமுடிப்பையும் தமிழ்க் கல்வி வளர்ச்சி மையத்தின் தலைவர் எல்.ஆர்.ஜி. இளங் கோவன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இயல், இசை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்கு முத்துலிங்கம் தலைமையில் பரிசுகளும் அளிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சி 24.10.2018 புதன் காலை 10 மணிக்கு மேட்டு சிவன் ஆலயம், எண். 76/80, பந்நாடல்லா வீதி, மங்கலா டௌன் நூன் நகர், யாங்கோன் என்ற முகவரியில் பர்மாவில் நடைபெற்றது.

அம்பேத்கர் காட்டிய நெறியில்

# சபரிமலை தீர்ப்பு

- க. முகிலன்

பெண்கள் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குச் செல்லக் கூடாது என்கிற தடை மீதான வழக்கில் 17 ஆண்டுகள் கழித்து உச்சநீதிமன்றம் 28.9.2018 அன்று தீர்ப்பு வழங்கியது. தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா நீதிபதி ஏ.எம்.கன்வில்கர் ஆகியோர் இணைந்தும், நீதிபதி ஆர்.எப். நாரிமன், நீதிபதி டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் தனித்தனியாகவும் வழங்கிய தீர்ப்புகளில் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்கு 10 அகவை முதல் 50 அகவை வரையில் உள்ள பெண்கள் செல்வதற்கு அரசமைப்புச் சட்டப்படி உரிமை உண்டு என்று தீர்ப்பளித்தனர். பெண் நீதிபதியாகிய இந்து மல்கோத்ரா மதநம்பிக்கை அடிப்படையிலான பழக்க, வழக்க நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிடக் கூடாது என்கிற மாறுபட்ட தீர்ப்பை வழங்கினார். அய்ந்து நீதிபதிகளும் இந்துக்கள் ஆவர்.

1951ஆம் ஆண்டு பம்பாய் அரசு எதிர் நரசு அப்பா மாலி வழக்கில் பம்பாய் உயர்நீதிமன்றம், தனிமனித உரிமைகளின் பெயரால் மத நம்பிக்கை சார்ந்த பழக்கம், வழக்கம் என்கிற நடைமுறைகளில் தலையிட முடியாது என்று தீர்ப்பளித்தது. ஆனால் 67 ஆண்டுகள் கழித்து சபரிமலை தீர்ப்பில், அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களான சுதந்தரம், சமத்துவம், தன்மதிப்பு ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டதாகவே பழக்கம், வழக்கம், நம்பிக்கை சார்ந்த நடைமுறைகள் அமைந்திட வேண்டும் என்று நான்கு நீதிபதிகள் திட்டவட்டமாகக் கருத்துரைத்துள்ளனர். மதம் சார்ந்த வழக்கில் முற்போக்கான தீர்ப்பாக இது கருதப்படுகிறது.

1947க்குமுன்-பிரித்தானிய ஆட்சியில் திருவிதாங்கூர், மன்னராட்சியின்கீழ் ஒரு சிற்றரசாக விளங்கியது. சபரிமலை அய்யப்பன் கோயில் திருவிதாங்கூர் ஆட்சிப் பகுதியில் இருந்தது. அரச குடும்பத்துப் பெண்கள் அய்யப்பன் கோயிலுக்குச் சென்று வந்தனர். மாதத்தில் அய்ந்து நாள்களில் குழந்தைக்கு முதல் சோறு ஊட்டும் சடங்கை சபரிமலை அய்யப்பன் கோயிலில் தாய்மார்கள் நடத்தி வந்தனர். 1950இல் திருவிதாங்கூர் - கொச்சி இந்து மத நிறுவனங்கள் சட்டத்தின்படி திருவிதாங்கூர் அரசரின் பொறுப்பில் இருந்த சபரிமலைக்கோயில், திருவிதாங்கூர் தேவசம் வாரியத்தின் பொறுப்பில் சென்றது. இது தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பாகும்.

1956இல் கேரளம் தனி மாநிலமானது. 1965இல் கேரள அரசு "கேரள இந்துக் கோயில்கள் நுழைவு அனுமதி சட்டம்" என்பதை இயற்றியது. இதன் நோக்கம் தாழ்த்தப்பட்டவர்களையும், பழங்குடியினரையும் தடையின்றிக் கோயில்களில் அனுமதிக்க வேண்டும் என்பதாகும். அதன்பின் திருவிதாங்கூர் தேவசம் வாரியம் மூலம் மாதவிடாய் அகவைப் பருவத்தில் உள்ள பெண்கள் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குள் வருவதைத் தடைசெய்யும் விதி 3(b) இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டது. அதுவரையில் பெண்கள் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குச் சென்றனர். கருவறைப் பகுதிக்குச் செல்லாமல் வெளியிலிருந்தவாறே அய்யப்பனை வழிபட்டு வந்தனர்.



சபரிமலை தீர்ப்புக்கு எதிராக சங்பரிவாரங்கள் நடத்திய மோட்டார் சைக்கிள் பேரணி

இச்சட்டம் இயற்றப்பட்ட போதிலும், நவம்பர்-திசம்பர் மாதத்தில் நடைபெறும் மகர விளக்குப் பூசை நடக்கும் காலம் தவிர, மற்ற மாதங்களில் எல்லா அகவைப் பெண்களும் சபரிமலைக்குச் சென்று வழிபட்டுக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், தீவிர அய்யப்ப பக்தரான எஸ். மகேந்திரன் என்பவர் பெண்கள் சபரிமலைக் கோயிலுக்குச் செல்வதற்குத் தடைவிதிக்கக் கோரி 1990இல் கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். 1991 ஏப்பிரல் 5 அன்று கேரள உயர்நீதிமன்றம் 10 அகவை முதல் 50 அகவை வரை உள்ள பெண்கள் சபரிமலைக் கோயிலுக்குச் செல்ல தடைவிதித்தது. இதுகுறித்து 15 ஆண்டுகள் எவரும் மேல் முறையீடு செய்யவில்லை.

2006இல் கன்னட நடிகை செயமாலா சபரிமலை அய்யப்பன் கோயில் கருவறைக்குள் சென்று அய்யப்பனைத் தொட்டு வழிபட்டதாகக் கூறினார். இது பெரும் விவாதப் பொருளானது. நடிகை செயமாலாவுக்கு



நிலக்கல்லில் மகிழுந்தில் வந்த பத்திரிகையாளர்களை சங்பரிவாரக் குண்டர்கள் தாக்கினர்

எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்நிலையில், இளம் வழக்குரைஞர்கள் சங்கத்தின் சார்பில் 2006 ஆகத்து 4 அன்று பத்து முதல் அய்ம்பது அகவை வரை உள்ள பெண்களைச் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

2008 மார்ச்சு 7 அன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் எஸ்.பி. சின்கா, வி.எஸ். சிர்புர்கர் ஆகியோர் இந்த வழக்கை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தனர். அதன்பின் எட்டு ஆண்டுகள் இந்த வழக்குக் கிடப்பில் போடப்பட்டிருந்தது. 2017 அக்டோபர் 13 அன்று உச்சநீதிமன்றம் 5 நீதி பதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று கூறியது. இதன்படி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம். கன்வில்கர், ஆர்.எப். நாரிமன், டி.ஒய். சந்திரசூட், இந்துமல்கோத்ரா ஆகியோரைக் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு 2018 சூலை 17 முதல் ஆகத்து 1 வரை இவ்வழக்கை விசாரித்தது; நீதிபதிகள் 28.9.2018 அன்று தீர்ப்பு வழங்கினர்.

இந்த வழக்கு விசாரணையின் போது மாதவிடாய் அகவைக்குள் இருக்கும் பெண்களுக்கான கோயில் நுழைவுத் தடை நீக்க வேண்டும் என்பதற்கு அய்யப்ப பக்தர்கள் சங்கம், நாயர் சேவை சங்கம் பந்தளம் அரசக் குடும்பத்தினர் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் சார்பில் முதன்மையாக மூன்று காரணங்கள் முன்வைக் கப்பட்டன. 1. அய்யப்ப பக்தர்கள் இந்து மதத்தில் தனித்துவமான பிரிவினர் எனும் தகுதிக்குரியவர்கள் (Denominational Status); எனவே அரசமைப்புச் சட்டம் பிரிவு 26இன்படி, மத நம்பிக்கை சார்ந்த நடவடிக்கைகளை அவர்களின் வழக்கப்படி பின்பற்றிக் கொள்ள உரிமை உண்டு. 2. சபரிமலையில் உள்ள அய்யப்பன் நைஷ்டிக பிரம்மச்சாரி அதாவது கடுமை யான பிரம்மச்சரியம் பூண்டு தவநிலையில் இருக்கிறார். அதனால் 10 முதல் 50 அகவைப் பெண்கள் அவரைத் தரிசிக்க அனுமதிப்பது அய்யப்பனின் பிரம்மச்சரியத்தைக் குலைக்கும். 3. கேரள அரசு 1965இல் இயற்றிய இந்துக் கோயில்கள் (நுழைவு அனுமதி) சட்டம் விதி (3b)இல் பழக்க-வழக்க நடைமுறைகளின்படி, பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட கோயில்களுக்குப் பெண்கள் செல்ல முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

ஆண் நீதிபதிகள் நால்வரும், அய்யப்ப பக்தர்கள் இந்து மதத்தின் தனியான ஒரு பிரிவினர் என்பது நடப்பில் இல்லை; இதற்கான சாத்திர ஆதாரமும் இல்லை என்பதால் இதை ஏற்க முடியாது என்று தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர். ஆனால் நீதிபதி இந்து மல்கோத்ரா தன்னுடைய தீர்ப்பில், அய்யப்ப பக்தர்கள் ஒரு தனிப் பிரிவினர் என்றும் அதனால் பெண்களுக்கான தடைநீடிக்க வேண்டும் என்றும் கருத்துரைத்துள்ளார்.


நீதிபதி சந்திரசூட் தன்னுடைய தீர்ப்பில், ''பெண்கள் கோயிலுக்குச் செல்லக் கூடாது என்பதற்கு மத சாத்திர ஆதாரங்கள் இருந்தால்கூட, அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களான சுதந்தரம், சமத்துவம், தன்மதிப்பு ஆகியவற்றுக்கு அது அடிபணிந்ததாகவே இருக்க

வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் அடிப் படை அலகாக இருப்பது தனிமனிதரே! எனவே தனிமனிதனின் சுயமரியா தையைக் காக்கின்ற கண்ணோட்டத் துடன் தான் தற்போதுள்ள கட்டமை ப்பையும் சட்டங்களையும் அணுக வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதி ஏ.எம். கன்வில்கர் அளித்த தீர்ப்பில், ''மதத்தில் ஆணாதிக்கத்தை அனுமதிக்க முடியாது; பிரிவு 25(1) இன்படி எல்லா அகவையினரும் ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் வழிபடு வதற்கு உரிமை உள்ளது. பெண்களின் உடற் கூறைக் காரணம் காட்டி அவர் களை விலக்குவதும், அவர்களின் வழி பாட்டு உரிமையை மறுப்பதும் அரச மைப்புச் சட்டத்துக்கு எதிரானது'' என்று கூறியுள்ளனர். நீதிபதி டி.ஒய். சந்திரசூட் இன்னும் ஒருபடி மேலே சென்று, ''மாதவிடாய் அகவையினராக இருப்பதைக் காரணம் காட்டி அவர்களை விலக்கம் செய்வது தீண்டாமையின் வடிவமே ஆகும்; புனிதம்-தீட்டு என்கிற பெயரால் எவரையும் இழிவுபடுத்துவதற்கு அரசமைப்புச் சட்டம் இடமளிக்காது'' என்று கூறி பெண்களின் கோயில் நுழைவு உரிமையை நிலைநாட்டியுள்ளார்.

கேரள அரசு 1965இல் இயற்றிய இந்துக் கோயில்கள் (நுழைவு அனுமதி) சட்டத்தின் பிரிவு (3b) செல்லாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்து மதத்தில் உள்ள எல்லாப் பிரிவினரும், வகுப்பினரும் கோயிலில் வழிபடு வதற்கு; பழக்கம் மற்றும் வழக்கம் என்கிற நடைமுறை (Custom and Usage) தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டத்தில், அதன் அடிப்படை நோக்கத்திற்கு எதிராக, வழக்கம் என்கிற பெயரால் பெண்கள் கோயிலுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கும் விதி (3b) அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று நான்கு நீதிபதிகள் அறிவித்தனர்.

இத்தீர்ப்பை பெரும்பாலோர் வரவேற்றனர். கேரளத்தில் ஆட்சியில் இருக்கும் இடதுசாரி சனநாயகக் கூட்டணி யின் முதலமைச்சர் பினராய் விசயன் உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி பெண்கள் சபரிமலைக்குச் செல்வதற்கு உரிய ஏற்பாடுகளும் பாதுகாப்பும் வழங்கப்படும் என்று அறிவித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலை மையிலான ஆட்சிக் காலத்தில் கேரள அரசு சபரிமலைக் கோயிலுக்குப் பெண்கள் செல்வதை உச்சநீதிமன்ற வழக்கு விசாரணையில் தொடர்ந்து ஆதரித்து வந்தது. ஆனால் காங்கிரசுக் கட்சியின் தலைமையிலான ஆட்சி இதை எதிர்த்து வந்தது.



18 படிகள் அருகில் இளம் பெண்கள் வரவிடாமல் தடுத்து மறியல் செய்யும் கோயில் அர்ச்சர்கள்

அய்யப்ப பக்தர்கள் இத்தீர்ப்பை எதிர்த்தனர். ஆர்.எஸ்.எஸ்.-ம் பா.ச.க.வும் கேரளத்தில் தங்கள் அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாக இத்தீர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டன. அய்யப்ப பக்தர்களை முன்னிறுத்தி, கேரளம் முழுவதும் ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் சங் பரிவார அமைப்புகள் நடத்தின. குறிப்பாக, பெண்களைப் பெரு மளவில் திரட்டி ''நாங்கள் சபரிமலைக்குச் செல்ல மாட்டோம்'' என்று கூறச் செய்தனர். கேரள அரசும், திருவிதாங்கூர் தேவசம் வாரியமும் உச்சநீதிமன்றத்தில் சீராய்வு விண்ணப்பம் போட வேண்டும் என்று வலி யுறுத்தினர். இத்தீர்ப்புக்கு எதிரான போராட்டங்களில் காங்கிரசுக் கட்சியும் தீவிரமாகப் பங்கேற்றது.

ஐப்பசி மாத பூசைக்காக சபரிமலை அய்யப்பன் கோயில் 17.10.2018 அன்று திறக்கப்பட்டது. அய்யப்ப பக்தர்கள் என்ற போர்வையில் சங் பரிவாரத்தினர் சபரிமலைக்கு வந்த பெண்களை வழியில் தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்பினர். ஆந்திரத்திலிருந்து தன் கணவர், இரண்டு பிள்ளைகளுடன் வந்த மாதவி காவல் துறையின் பாதுகாப்புடன் பம்பையைக் கடந்து மலை ஏறும்போது 'பக்தர்களால்' மேற்கொண்டு செல்லவிடாமல் தடுக்கப்பட்டார். இதேபோன்று பல பெண் செய்தியாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்; தாக்கப் பட்டனர். அதனால் காவல் துறையினர் தடியடி நடத்தினர். 'பக்தர்கள்' காவல்துறையினர் மீது கற்களை வீசித் தாக்கினர்.

இரண்டு பெண்கள் காவல் துறையினரின் பாது காப்புடன் 18 படிகள் அருகில் சென்ற போது 'பக்தர்கள்'



சபரிமலைக்கு வரும் அரசுப் பேருந்துகளில் உள்ள பெண்களை வலுக்கட்டாயமாக இறக்கிவிடும் காவிக்கும்பல்

தரையில் அமர்ந்து அய்யப்ப முழக்கங்களை எழுப்பி மறியல் செய்தனர். அப்போது அய்யப்பன் கோயிலின் அர்ச்சகர்களும் (தந்திரிகள்) பூசையை நிறுத்திவிட்டு 18 படிகள் முன் அமர்ந்து பசனைப் பாடல்களைப் பாடி னார்கள். தலைமை அர்ச்சகர் கண்டராரு ராஜிவாரு பெண்கள் கோயிலக்குள் நுழைந்தால் கருவறையின் கதவை மூடிவிடுவோம் என்று எச்சரித்தார். இதனால் கொந்தளிப்பான நிலை ஏற்பட்டது. பந்தளம் அரசக் குடும்பத்தினரும், அய்யப்பன் கோயில் தலைமை அர்ச்சகர்களும் சபரிமலை அய்யப்பன் கோயில் அவர் களுடைய சொத்து போல் கருதி நடந்து கொண்டு வருகின்றனர். அதன்பின், காவல்துறை ஐ.ஜி. ஒலி பெருக்கியில் அவ்விரு பெண்களும் திரும்பிச் செல்ல ஒத்துக்கொண்டனர் என்று அறிவித்தார். அதனால் பெரும் மோதல் தவிர்க்கப்பட்டது. முறைப்படியான 5 நாள்கள் நடைத் திறப்புக்குப்பின் கோயில் 22.10.18 அன்று மூடப்பட்டது. எந்த ஒரு பெண்ணும் 18 படிகளை ஏறி அய்யப்பனை வழிபடவிடாமல் பக்தகேடிகள் தடுத்து விட்டனர். அடுத்து, மண்டல - மகர விளக்கு பூசைக்காக நவம்பர் 17 அன்று கோயில் திறக்கப்பட உள்ளது.

பல்வேறு அமைப்புகளின் சார்பில் 8.10.18 அன்று சீராய்வு விண்ணப்பங்கள் உச்சநீதிமன்றத்தில் அளிக்கப் பட்டன. இதை அவசர வழக்காக விசாரிக்க உச்சநீதி மன்றம் மறுத்துவிட்டது. தசரா விடுமுறைக்குப்பின் இந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்ட உச்சநீதி மன்றம் இவற்றின் மீதான விசாரணை 13.11.18 அன்று தொடங்கும் என்று அறிவித்துள்ளது.

மூல வழக்கின் விசாரணையின் போது, நாயர் சேவை சங்கத்தின் சார்பில் மூத்த வழக்குரைஞர் பராசரன் வாதிட்டார். அப்போது அவர், “கடவுளே இந்த வயதுடைய பெண்கள் கோயிலுக்குள் வருவதை விரும்பவில்லை; பிறகு நாம் எப்படி அனுமதிக்க முடியும்? இது கோயிலின் புனிதத் தன்மையைக் காப்பதற்காகத் தொன்றுதொட்டுவரும் நிகழ்வாகும். சபரிமலைக்கு ஆண்கள் தங்களது தாய், மகள், சகோதரி என எவரையும் அழைத்து வர உரிமை உள்ளது. ஆனால் அவர்களின் அகவை பத்துக்குக் குறைவாகவும் அய்ம் பதைக் கடந்தும் இருக்க வேண்டும்” என்று கூறினார்.

1.10.18 நாளிட்ட தினமணி ஏட்டில் வெளிவந்த கட்டுரையில், “இந்தப் பிரச்சனையின் அடிப்படை நம்பிக்கை சார்ந்தது. பெண்களின் மாதவிடாயை அடிப் படையாகக் கொண்டு அவர்களுக்கு அனுமதி மறுக்கப் படுகிறது என்கிற தவறான வாதம் முன்வைக்கப்படுகிறது. அது நிராகரிக்கப்பட வேண்டும். சபரிமலையில் அய்யப்பன் நைஷ்டிக பிரம்மச்சரியத்துடன் கூடிய கடுமையான தவத்தில் இருப்பதாக பக்தர்கள் நம்புகிறார்கள். அப்படித் தவக் கோலத்தில் இருக்கும் சபரிமலை அய்யப்பனின் சந்நிதியில் பெண்கள் அனுமதிக்கப்படக்கூடாது என்பது மாதவிடாய் காரணமாக அல்ல; தர்ம சாஸ்தாவின் தவநிலை காரணமாக என்பதை உணர வேண்டும். தனது தவம் கலைந்துவிடக்கூடாது என்பதற்காக அய்யப்பன் தனக்குத்தானே விதித்துக் கொண்ட கட்டுப்பாடு இது” என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு, சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குப் பெண்களை அனுமதிக்கக் கூடாது என்று கூறுவோர், சொற்களை எவ்வளவுதான் மாற்றி மாற்றிப் போட்டாலும், அவர்களின் முதன்மையான கருத்து - மாதவிடாய் என்பது தீட்டு; மாதவிலக்கு ஆகும் பெண்களும் தீட்டானவர்கள் -தூய்மையற்றவர்கள்-பிரம்மச்சரிய நிலையில் உள்ள அய்யப்பன் முன் நிற்பதற்கும் வழிபடுவதற்கும் தகுதி அற்றவர்கள் என்பதே ஆகும்.

எல்லா மதங்களும் பெண்களை இழிவுபடுத்து கின்றன. ஆனால் இந்து மதம் போல் ‘தீட்டு’ என்பதன் பெயரால் மற்ற மதங்கள் பெண்களை இழிவுபடுத்து வதில்லை. எல்லா மதங்களிலும் ‘புனிதம்’ என்கிற கோட்பாடு இருக்கிறது. ஆனால் இந்து மதத்தில் புனிதம் என்பதற்கு எதிராகத் ‘தீட்டு’ - தூய்மையற்ற நிலை - தீண்டாமை என்பதை முன்னிறுத்தி மனிதர்களை இழிவுபடுத்தல் - ஒடுக்குதல் என்பது பிற மதங்களில் இல்லை. மனுதர்ம சாத்திரத்தில் 5ஆம் பகுதியில் விதி 55 முதல் 110 வரை மனிதர்கள் தொடர்பான தீட்டுகள், அவற்றுக்கான கழுவாய்கள் பற்றி கூறப்பட்டுள்ளன. விதி 57 இறப்புத் தீட்டு பற்றியும் விதி 61 பிறப்புத் தீட்டு பற்றியும் கூறுகிறது. விதி 66இல் வீட்டுவிலக்கானவள் நான்காம் நாள் முழுகியதும் தூய்மையடைவாள் என்று சொல்லப்பட்டுள்ளது.



அக்டோபர் 18 அன்று நியூயார்க் டைம்ஸ் ஏட்டின் தில்லி நிருபர் சுகாசினி ராஜ் காவல்துறையினரின் பாதுகாப்புடன் சென்றபோதும் காவிக்கும்பலால் திருப்பி அனுப்பப்பட்டார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான போராட்டத்தில் பெண்கள் முன்னிலை வகிப்பதில் வியப்பதற்கில்லை. அந்த அளவிற்கு இந்துமதம் பெண்களை அடிமை மனநிலையில் ஆழ்த்தி வைத்திருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு முன் கேரளத்தில் கீழ்ச்சாதிப் பெண்கள் தங்கள் மார்பகங்களை மறைக்கக்கூடாது என்கிற நடைமுறை இருந்தது. இதை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற போது, மார்பகங்களை சேலையால் மூடிய பெண்களின் மார்புத் துணியை, மார்பகங்களை மறைக்காத பெண்கள் கிழித்தனர் என்பது வரலாறு.

தொன்றுதொட்டு இருந்துவரும் நம்பிக்கை, பழக்க-வழக்க நடைமுறை என்கிற பெயரால் இந்துமத ஆதிக்கவாதிகள் மதம் சார்ந்த மாற்றங்களை எதிர்த்து வருகின்றனர். கணவன் இறந்தவுடன் மனைவியையும் உடன் வைத்து எரிக்கும் உடன்கட்டை ஏறுதல் என்கிற வழக்கத்தை ஒழிக்க 1829இல் ஆங்கிலேய அரசு சட்டம் கொண்டுவந்த போது பார்ப்பன சனாதனவாதிகள் எதிர்த்தனர். குழந்தை மண ஒழிப்பு, கைம்பெண் மறுமணம், தேவதாசி முறை ஒழிப்பு, தலித்துகள் கோயில் நுழைவு போன்றவற்றை மதநம்பிக்கை - பழக்க வழக்கம் என்கிற பெயரால் படித்த அறிவாளிகள் எனப்பட்ட பார்ப்பன-இந்துமத ஆதிக்கவாதிகள் எதிர்த்தனர். 1950க்குமுன் வரை பெண்களுக்கு மணவிலக்கு உரிமை, சொத்துரிமை கிடையாது. ஆண்கள் பல பெண்களை மணக்கலாம். இந்த இழிநிலைகள் எல்லாம் சட்டத்தின் மூலம் மாற்றப்பட்டன.

பழக்க-வழக்க நடைமுறைகள் என்கிற பெயரால் இந்து மதத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை, ஆதிக்க நிலையை அகற்றுவதற்காக மேதை அம்பேத்கர் 1947இல் இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவை அரசமைப்புச் சட்ட அவையில் முன்மொழிந்தார். அவர் கொண்டு வந்த திருத்தத்தின் விபரம் :

"இந்தச் சட்டத்தில் திட்டவட்டமடாகக் குறிப்பிட்டவை நீங்கலாக -

அ) இந்துச் சட்டம் பற்றிய மூலபாடம் (text), விதிகள், பொருள் விளக்கம் (interpretation) அல்லது இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் ஏற்கெனவே நடப்பில் இருந்த எந்தப் பழக்கச் சட்டமும் வழக்கச் சட்டமும் - இந்தச் சட்டம் நடப்புக்கு வந்த உடனேயே நீக்கப்பட்டுவிடும். இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்ட எந்தவொன்றும் உடனடியாக நடப்புக்கு வந்துவிடும்.

ஆ) இந்தச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால், இந்தச் சட்டத்துக்குப் பொருந்தாத தன்மையில் இதற்கு முன்னர் நடப்பில் இருந்த எந்தச் சட்டமும் உடனடியாக நீக்கப் பெற்றுவிடும்" (அம்பேத்கர் நூல் திரட்டு - இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா நூல் (ஆங்கிலம்) பக்கம் 54).



உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி சபரிமலைக் கோயிலுக்குப் பெண்களை அனுமதிக்ககூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்யும் அகிலபாரத இந்து மகாசபையினர்

அரசமைப்புச் சட்ட அவையில் இந்துமத ஆதிக்கவாதிகளின் எதிர்ப்பால் இது நிறைவேறாமல் தடுக்கப்பட்டதால் 1951இல் அம்பேத்கர் தன் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

பழக்கச் சட்டம், வழக்கச் சட்டம் குறித்து அம்பேத்கர் கொண்டுவர விரும்பியதன் ஒருதப்படிதான் 28.9.18 அன்று உச்சநீதிமன்றம் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குப் பெண்கள் செல்லலாம் என்று வழங்கிய தீர்ப்பு ஆகும்.

பெண்ணுரிமையை, சமத்துவத்தை, சனநாயகத்தைப் போற்றுகின்ற அனைவரும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு செயல்வடிவம் பெற உறுதுணையாக நிற்போம். ❖

“வாங்க அப்பா!” என வாஞ்சையோடு வரவேற்கும் மகள்

# தில்லைநாயகி

## தோழர் து. தில்லைவனம் துணைவியார் மறைவுற்றார், அந்தோ !

- வே. ஆனைமுத்து

30.09.2018-இல் அம்பத்தூர், பெரியார் ஈ.வெ.ரா-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை வளாகத் தில் ஆலோசனைக் கூட்டம் முடிந்த உடன் “அவசரமாகத் திருச்சிக்குப் போகவேண்டும்” என்றார் தோழர் தி. துரை சித்தார்த்தன். ‘ஏன்?’ எனக் கேட்டேன். “அம்மா உடல் நலம் கெட்டு இருக்கிறார்” என்றார்.

மூன்று நாட்கள் தொடர்ந்து கைப்பேசியில் தொடர்பு கொண்டு வினவினேன். 04.10.2018 அன்று, “இன்று அரிசிக் கஞ்சி குடித்தார், தேவ லாம்” என்றார்.

அந்தோ! 05.10.2018 காலை 7.50 மணிக்குக் கைப்பேசியில் பேசிய தோழர் தி. துரைசித்தார்த்தன், கதறிக்கொண்டே “அம்மா இறந்து விட்டார்” என்று கூறியவுடன் பக்கத்திலிருந்த என் மகனிடம் விவரத்தைச் சொல்லி, “நான் மதிய உணவுக்குப் பிறகு காட்டுமன்னார் குடிக்குப் புறப்பட வேண்டும்; மகிழுந்து வேண்டும்” என்றேன். அவர், தன் மகிழுந்தைப் பழுதுபார்த்து ஆயத்தப்படுத்தினார்.

முனைவர் ஆ.முத்தமிழ்ச்செல்வன், ப.வடிவேலு, இரா.பகுத்தறிவாளன் ஆகியோர் பிற்பகல் 2.00 மணிக்குத் தாம்பரத்திலிருந்து காட்டு மன்னார்குடிக்குப் புறப்பட்டோம். மாலை 6.40 மணிக்குத் தில்லை நாயகி இல்லம் சேர்ந்தோம். என்னையும் மறந்து “தில்லை! தில்லை!” என பத்து மணித்துளிகள் கதறிவிட்டேன். மூன்று அன்பு மகள்களும் மகனும் என் கைகளைப் பிடித்துக்கொண்டு கதறி அழுதனர்.

வடக்கு மாங்குடி பா.மோகன், இராமு. காந்தி இருவரிடமும் “என் உடல் கெட்டிருக்கிறது; உடனே சிதம்பரம் சென்று, மருத்துவர் க. சம்பந்தம் அவர்களைப் பார்க்கவேண்டும்” எனக் கூறினேன். அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்தனர். சிதம்பரம் சென்று மருத்துவரைப் பார்த்துவிட்டு, இரவு அங்கேயே தங்கிவிட்டோம். சிதம்பரத்திலிருந்து 06.10.2018 காலை 9.00 மணிக்குப் புறப்பட்டு, 9.45 மணிக்கு மீண்டும் தில்லைநாயகி அவர்கள் இல்லத்தில் அவருடைய உடலைப் பார்த்தோம். மழை இடைவிடாமல் பெய்தது. கனமழைக்கு இடையே 25 தோழர்கள், தோழியர்கள் இரங்கல் உரை ஆற்றினர். நான் இரங்கல் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றேன்.

புதுவையிலிருந்து மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் வந்து, தில்லைநாயகியின் உடலைப் பிற்பகல் 2.30 மணிக்கு ஏற்றிச் சென்றனர். வாழ்ந்த காலத்திலே தம் கணவரை, தம் மக்களை, மருமக்களை, உறவினர்களை, கட்சித் தோழர்களைப் புரந்தார் தில்லைநாயகி. மறைந்த பின்னரும் அவருடைய உடல் மருத்துவம் கற்கும் மாணவர்களுக்கு ஆய்வுக்குப் பயன்படும்.



தில்லைநாயகியும் தில்லைவனமும் ஈருடல்கள் ஓர் உயிராக வாழ்ந்ததை நான் நேரில் பார்த்தேன்.

1964இல், திருச்சியில், என் தனிப் பயிற்சிக் கல்லூரியில் 100 மாணவர்கள் சேர்ந்துவிட்டனர். அப்போது எனக்கு ஆலோசனை வழங்கியவர் ஆசிரியர் து. தில்லைவனம்; மாணவர்களைத் தேடிச் சேர்க்க உதவியவர் புலவர் து. தயாளசாமி; பொருளுதவி செய்தவர் உறையூர் கோ. முத்துக்கிருட்டிணன்.

07.03.1970-இல், ‘திருச்சி சிந்தனையாளர் கழகம்’ தொடங்கப்பட்டது; தந்தை பெரியார் அவர்கள் தொடங்கி வைத்தார். 1971-இல் ‘பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்’ தொகுப்புப் பணியை மேற்கொண்டோம். 1972-1973-இல் ஆசிரியர் வீராணந்தபுரம் ந. கணபதி, சின்னபுங்கனேரி வே.காசிநாதன் இருவரும் நூலை அச்சேற்றும் வரையில் இப் பணிக்கு உதவினர்.

17.08.1973-இல், திருச்சியில் என் ‘பாவேந்தர் அச்சகத்தை’த் தந்தை பெரியார் அவர்கள் திறந்து வைத்தார். தந்தை பெரியார் 24.12.1973-இல் மறைந்தார். ‘பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்’ நூல் 01.07.1974-இல் வெளியிடப் பட்டது.

அப்போது, து. தில்லைவனம், திட்டக்குடி அரசினர் உயர் நிலைப் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந் தார். அடிக்கடி அவரை அங்குச் சந்தித்தேன். ‘பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்’ நூல் சுழற்சி முறையில் விற்கப்பட அவர் ஏற்பாடு செய்தார். எங்களிடையே 1975-இல் நெருக்கம் அதிகமானது. அந்தப் பகுதியில் சுற்றினால் தில்லைவனம்-

தில்லைநாயகி வீட்டில்தான் உணவு; தங்கல். அங்கு சுகாதார ஆய்வாளராக இருந்த பொதுவுடைமைக் கட்சிக்காரரான இன்றைய அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் அருண் மொழித்தேவன் அவர்களின் தந்தையார் ஏ.வி.ஆறுமுகம் அவர்களுடன் நாங்கள் அளாவளாவுவோம்.

திருச்சியில், 17.08.1974-இல் 'சிந்தனையாளன்' கிழமை இதழ் என்னால் தொடங்கப்பட்டது. நான் 13.11.1975-இல் அறிக்கை வழியாக தி.க தலைமையைக் கண்டனம் செய்தேன். அதனைக் காரணம் காட்டி, என்னைத் திராவிடர் கழகத் திலிருந்து 16.11.1975-இல் நீக்கிவிட்டனர். என் நிலைபாட்டை ஏற்றுக்கொண்ட தோழர்கள் 08.08.1976-இல், சீர்காழியில், தோழர் மா. முத்துச்சாமி இல்லத்தில் கூடி, 'பெரியார் சம உரிமைக் கழகம்' என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக் கினோம். பெரியார் சம உரிமைக் கழகத்தின் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் இவற்றை உருவாக்குவதற்கு தோழர் தில்லைவனம் மிகவும் உதவினார்.

'சிந்தனையாளன்' இதழில் வேளாண்மை மற்றும் அரசியல் கட்டுரைகளையும், பகுத்தறிவுச் சிறுகதைகளையும் தொடர்ந்து எழுதினார் தில்லைவனம். புலவர் புங்கனேரியான் என்ற சி. அப்பாவு தொடர்ந்து கவிதைகள் எழுதினார்.

1980-இல், காட்டுமன்னார்குடி உயர்நிலைப் பள்ளிக்குப் பணி மாறுதல் பெற்ற தில்லைவனம், 14.1.1982 பொங்கல் நாளில், காட்டு மன்னார்குடி, பெரியார் நகரில், சொந்த வீட்டில் குடியேறினார். 1976 நவம்பருக்குப் பிறகு, சின்னபுங்கனேரி, காட்டுமன்னார்குடி தில்லைவனம்-தில்லைநாயகி இல்லங்கள் 'பெரியார் சம உரிமைக் கழகம்' பற்றி விவாதிக்கும் இடமா யிற்று. சீர்காழி மா. முத்துச்சாமியும் நானும் வீரானந்தபுரம் ந.கணபதி இல்லம், தில்லைவனம் இல்லங்களில் கூடி விவாதிப்போம். இரண்டு இல்லங்களின் தாய்மார்களும் எங்களை உடன்பிறந்தவர்கள் போல் கருதி ஓம்பினர்.

1988-இல், 'பெரியார் சமஉரிமைக் கழகம்' என்பதை 'மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி' எனப் பெயர் மாற்றினோம்.

எங்கள் கட்சியின் செயல்படு தலைமை இடம் 1982 முதல் சென்னை ஆயிற்று. தோழர் து. தில்லைவனம் தம் ஆசிரியர் பணியிலிருந்து ஒய்வுபெற்ற பின்னர் என் வலது கையாகச் செயல்பட்டார்.

மகள்கள் முத்தொளி-க.கோவிந்தராசு, மலர் வாலண் டினா-அ.பழனியாண்டி, நிலா-த.தருமலிங்கம், மகன் துரைசித்தார்த் தன்-எ.செம்மலர் ஆகியோர்க்கு, தில்லை வனம்-தில்லைநாயகி இருவரும் நலமோடு இருக்கும் போதே வாழ்க்கை ஒப்பந் தங்களை என் தலைமையில் திருமணம் முடித்து வைத்தனர்.

தங்கள் மகன் துரைசித்தார்த்தன் தன் காலில் நிற்க வேண்டும் எனக் கருதிய பெற்றோர் தில்லைவனம் - தில்லை நாயகி இருவரும் கலந்து பேசி, நல்ல வருவாய் தரும் தொழில் ஏற்பாடுகளைச் செய்துவைத்தனர்.

மூத்த மகளின் மகள் கோ. இளவேனில், மகன் கதிரவன் ஆகியோருக்கு, தில்லைநாயகி அவர்களும் துரைசித்தார்த்தன் அவர்களும் முன்னின்று உறவுகளுடன் கலந்து பேசி மணம் முடித்து வைத்தனர்.

நான் 'பெரியாரியல்' பற்றிப் பல நூல்களைத் தோழர் து. தில்லைவனம் அவர்களின் ஆலோசனை பெற்று உருவாக் கினேன். என் வாழ்நாள் முழுவதும் அதை மறக்க இயலாது.

மேலே சொல்லப்பட்ட நான்கு நன்மக்களும், தமக் கையை இழந்து வருந்தும் தம்பிகள் வ. தியாகராசன், வ. நாகராசன், வ. இராசாதேசிங்கு, வ. கவுதமன், தங்கை மனோரஞ்சிதம் ஆகியோரும், நான்கு சம்பந்தி களும் தில்லை நாயகி அவர்களின் மறைவினால் ஏற்பட்ட இழப்பு கருதி வருந்தவேண்டாம்; இந்த எதிர் பாராத இழப்பைத் தாங்கிக்கொண்டு, தோழர் தில்லை வனம் - தில்லைநாயகி இணையர் வாழ்ந்த செம்மாந்த கொள்கை வாழ்வினைப் போற்றி வழிநடந்திடுங்கள் என அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

நான் என் சார்பிலும், என் துணைவியார் சுசீலா மற்றும் என் குடும்பத்தார் சார்பிலும், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும், தில்லைவனம் - தில்லைநாயகி குடும்பத்தார், உறவினர் அனைவர்க்கும் ஆறுதலும் தேறுதலும் கூறி அமைகிறேன்.

**வாழ்க! வளர்க! தில்லைநாயகி புகழ்!**

# கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன் அவர்களின் துணைவியார் தாமரைச் செல்வி மறைந்தார்



“மீண்டும் கவிக்கொண்டல்” இதழாசிரியர் மா.செங்குட்டுவன் அவர்களின் துணைவியா மா.செ.தாமரைச்செல்வி அவர் கள் உடல் நலக்குறைவால் 17.10.2018 அன்று மறைவுற் றார். திராவிட இயக்கக் கொள்கை களில் அடிநாள் முதல் செயல் பட்டு வந்த மா.செங்குட்டுவன் அவர்களோடு அறுபது ஆண்டுகள் நிறைவாழ்க்கை வாழ்ந்து 5 புதல்வர்களை; பெற்றவர். தொடக்க காலங் களில் திராவிட இயக்கப் போராட்டங்கள், மாநாடுகளில் கலந்து கொண்டவர். அம்மையாரை இழந்து துயறும் அவர்தம் மகன்கள் அன்பரசு, மதிவாணன், புகழேந்தி, முத்துச்செல்வன், மருமகள்கள் ஆகியோருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கறோம். தோழர்கள் கலச இராமலிங்கம், வாலாசா வல்லவன் ஆகியோர் நேரில் சென்று வீரவணக்கம் செலுத்தினர். ❖

# அரட்டுகின்றனர் ஆளுநர்கள் விரட்டிட வேண்டாமா?

- பொழிலன்

தமிழ்நாட்டை மட்டுமன்றி, இந்தியாவிற்குள் அடைக் கப்பட்டுள்ள மொழித் தேச மாநிலங்கள் எல்லாவற்றையும் ஆளுநர்கள் அரட்டிக் கொண்டிருக்கிறார்கள்..

எதற்காக அவர்கள் அரட்டுகிறார்கள்.. எல்லாரையும் அரட்டுவதற்கு அவர்கள் யார்?..அவர்களுக்கு அந்த அதிகாரங்களைக் கொடுத்தது யார்?..

இவை பற்றியெல்லாம் விரிவாகத் தெரிந்தால்தான் ஆளுநர்களை நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்..

காந்தி கொலை வழக்கிலேயே கோட்சே 16 - ஆண்டு களில் விடுதலை பெற்ற நடைமுறை இருந்த நிலையில், இராசீவ்காந்தி கொலை வழக்கில் 27 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையிலேயே அடைபட்டிருக்கும் ஏழு தமிழர்களை விடுதலை செய்ய ஆளுநரே முடிவெடுக் கலாம் என்று உச்சநெறிமன்றம் அறிவித்த பின்பும், அவர்களின் விடுதலையை முடக்கி வைக்கிறார் தமிழகத்திற்குள் வந்துள்ள இந்திய ஆளுநர்.

தமிழர்களின், தமிழ்நாட்டின் நலன் நோக்கி ஏதும் வாய் திறந்து விடாத ஆளுநர் என்போர் தமிழருக்குத் தேவையா?

அத்தகைய அதிகாரத்தால் தமிழருக்கு, தமிழ்நாட்டிற்கு என்ன பயன் உண்டு?

ஆளுநர்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன? அந்த அதிகாரங்களை யெல்லாம் வைத்துக்கொண்டு அவர்கள் அதிகாரம் செலுத்தத்தான் வேண்டுமா? இல்லாவிட்டால் என்ன நடந்து விடும்? என்பவை குறித்தும் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது..

**எப்போதிலிருந்து ஆளுநர் பொறுப்பு இருக்கிறது?**

ஆளுநர்கள் என்கிற அதிகாரத்தை அமைத்துக் கொடுத்தவர்கள் ஆங்கிலேயர்கள்தாம்.

அவர்கள் இங்கிலாந்தில் இருந்து கொண்டு இந்தியாவைத் தங்கள் ஆட்சி அதிகாரத்தால் உருவாக்கிய வர்கள்.

இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட பொருள்களை இங்குக் கொண்டு வந்து விற்க வந்தவர்கள், இங்கேயே அவற்றுக் கான மூலப்பொருள்களும் மலிவான உழைப்புக் கூலிகளும் கிடைப்பதைப் பார்த்துத் தொழிற்சாலைகளை அமைத்து தொழில்களைத் தொடங்கி விட்டார்கள்..

லிப்டன், கோத்ரெஜ், ப்ரூக்பாண்ட், லேலாண்ட், லார்சன், பிரிட்டானியா என எண்ணற்ற தொழிற்சாலை களை இங்கு வந்து நடத்தினர்.

பின்னர், அவற்றுக்குப் பாதுகாப்புக்காகப் படைகள் கொண்ட அரசை ஏற்படுத்திக் கொண்டனர்..

அதையே படிப்படியாக விரிவுபடுத்திப் பிரிட்டிஷ் இந்தியாவை உருவாக்கினர்.

இலண்டனில் இருந்தபடியே பிரிட்டிஷ் இந்தியாவை ஆளுமை செய்வதற்குக் கங்காணியாக கவர்னர் ஜெனரல் என்கிற பொறுப்பில் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்ற ஒருவரை 1777 முதல் 1785 வரை பதவியில் அமர்த்தினர்.

அந்தப் பதவிக்குக் கவர்னர் ஜெனரல் ஆப் பெங்கால் எனப் பெயரிட்டனர். அப்போதெல்லாம் கல்கத்தாவை நடுவப்படுத்தியே அவர்களின் நகர்வுகள் இருந்தன.

1833 முதல் கவர்னர் ஜெனரல் ஆப் இந்தியா என்ற பொறுப்பில் பல்வேறு ஆட்சித் தலைவர்கள் அமர்த்தப் பட்டனர்.

1858 முதல் 1946 வரை அந்த கவர்னர் ஜெனரல்கள் எல்லாம் 'வைஸ்ராய் என்றும் அழைக்கப்பட்டனர்.1947-இல் இந்தியா விடுதலை பெற்றதாக அறிவிக்கப்பட்ட பின்னர், முதல் கவர்னர் ஜென்ரல் மவுண்ட்பேட்டன் ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஏற்கெனவே கற்றுக்கொண்டி ருந்த பிரிட்டிஷ் ஆட்சி முறைகளுடன், மவுண்ட்பேட்டன் வழியாகவும் கற்றுத் தேர்ந்தபின் இராஜகோபாலாச்சாரி அடுத்த கவர்னர் ஜெனரலானார்..

1949 முதல் குடியரசுத் தலைவராக இராசேந்திர பிரசாத்தைத் தேர்வு செய்ய முனைந்தபோது, நேரு இராஜாஜியையே குடியரசுத் தலைவராக அமர்த்தப் பெரும் முனைப்புக் காட்டினார். அதற்கான காரணங் களும் நோக்கங்களும் தனி செய்திக்கு உரியன.

**பிற நாடுகளில் ஆளுநர்கள்**

காலனி நாடுகள் என்கிற குடியேற்ற நாடுகளாக உள்ளவை எல்லாம் கவர்னர் என்கிற அரசு அமைப்பைக் கொண்டிருக்கின்றன. அதன்படி அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் எல்லாம் ஆளுநர்கள் உண்டு. ஆனால் ஆளுநர்களைத் தேர்ந்தெடுக்கிற முறைகளும், அவர்களுக்கான அதிகார வரம்புகளும்தாம் வேறுபட்டவை.

**இந்தியாவில் ஆளுநர்கள்**

1947க்குப் பின்னர், இந்திய அளவில் குடியரசுத் தலைவர் அமைக்கப்பட்ட நிலையில், தலை மாநிலங் களில் ஆளுநர்களுக்குரிய பொறுப்புகளும் தேர்வுகளும் குறித்து நிறைய பேசப்பட்டன. சட்டமன்ற உறுப்பினர் களால்தாம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் பலவாறான கருத்துகள் கூறப்பட்டாலும்

இறுதியாக நேரு கொடுத்த அழுத்தத்தால் இப்பொழுதுள்ள முறைப்படி, இந்தியாவை ஆளுகிற கட்சியின் முடிவாகவே ஆளுநர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அதன்படி ஆளுநருக்கு உரிய அதிகாரங்கள் வரை யறுக்கப்பட்டன. ஆளுநருக்கான அதிகாரங்கள்

ஆளுநர்களுக்கு ஏது அதிகாரம் என்பதாகக் கருதினால் அது தவறு.

ஆட்சி நிலையில்,

சட்டமியற்றும் நிலையில்,

பொருளியல் வகைப்பாட்டு நிலையில்,

நீதி(நயன்மை)த் துறையில்,

எல்லாவற்றுக்கும் மேலாக விருப்ப அதிகாரம் என்ற நிலையில் என்று எல்லா நிலைகளிலும் அதிகாரம் படைத்தவராகவே ஆளுநர் பொறுப்பில் இருக்கிறார்.

1. மாநிலத்தின் நிர்வாக அதிகாரங்கள் ஆளுநரின் பொறுப்பில் இருக்கும். அந்த அதிகாரங்களை ஆளுநர் நேரடியாகவோ தன் கீழுள்ள அதிகாரிகளின் மூல மாகவோ செயலாட்சி செய்வார்.

என்பது 154(1) பிரிவிலான சட்ட நெறி.

இதுபோன்றதான நிலைகளிலேயே எண்.163, 163(3), 167(1) - (2) - (3), 217- வழங்கிய நெறி முறைகள் பல்வேறு வகையில் ஆளுநரின் அதிகாரங் களை விளக்குகின்றன.

2 சட்ட முன் வரைவு ஒன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின் ஆளுநரின் இசைவிற்காக அது அளிக்கப்பட வேண்டும். தனது ஒப்புதல் அல்லது இசைவுக்காக அனுப்பப்பட்ட சட்ட முன்வரைவில் தனது இசைவை வழங்கலாம் அல்லது இசைவினை மறுக்கலாம், அல்லது குடியரசுத் தலைவரின் கருத்துக்கு அதை ஒதுக்கி வைத்து விடலாம்.

அதேபோல், பொருள் திட்ட சட்ட முன்வரைவைத் தவிர பிற எந்தச் சட்ட முன்வரைவை யும், மீண்டும் மறு ஆய்வு செய்ய வேண்டும் என ஆணையிட்டுச் சேர்த்து ஆளுநர் அந்தச் சட்ட முன்வரைவைச் சட்டமன்றத்திற்குத் திருப்பி அனுப்பி விடலாம் என்கிற படியாகப் பல அதிகாரங்கள் ஆளுநருக்கு உண்டு என்பதை அறிய வேண்டும்.

3. பொருளியல் அதிகாரங்கள் என்கிற வகையில், ஆளுநரின் பரிந்துரை இல்லாமல் எந்த ஒரு பொருள் முன்வரைவையும், பண முன் வரைவையும் சட்ட மன்றத்தில் முன்மொழியக் கூடாது - என்கிற வகையில் பொருளியல் அதிகாரமும் ஆளுநரின் பிடிக்குள் வைக்கப்பட்டிருப்பதை உணர வேண்டும்.

4 ஒரு மாநிலத்தின் ஆட்சி அதிகார எல்லைக்கு உட்பட்ட குற்றத்தைச் செய்த குற்றவாளிகளின் தண்ட னையைக் குறைக்கவும், மாற்றவும், நிறுத்தி வைக்கவும், நீக்கிவிடவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

குற்றம்சாட்டப்பட்ட ஒருவர் மீது உசாவல் நடந்து கொண்டிருக்கும் போதோ, விசாரணை முடிந்து அவர் தண்டிக்கப்பட்ட பின்னரோ, எப்போது வேண்டுமானாலும் ஆளுநர் தன் அதிகாரத்தை நிறுவ முடியும்.

15 நாள்களுக்கு ஒரு முறை மாநிலத்தின் நிலைபற்றிக் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அறிக்கை அனுப்ப வேண்டும். மாநிலத்தில் நெருக்கடி நிலையைக் குடியரசுத் தலைவர் நடைமுறைப்படுத்துவதற்குரிய நிர்வாக நிலை பற்றிய அறிக்கையைக் குடியரசுத் தலைவர் கேட்கும் போது மாநில ஆளுநர் அனுப்ப வேண்டும் எனும் சட்ட நெறி 356 - பிரிவுப்படி ஆளுநருக்கான அதிகாரங்கள் நிரம்ப உண்டு.

5 இவையன்றி, ஆளுநரின் விருப்ப அதிகாரங்கள்() என்கிற பெயரில் நெறிவிலக்கு என்கிற அடிப்படையில் ஆளுநர் என்ன முடிவையும் முன்னெடுக்க முடியும்

இவ்வகையில் எல்லாம் பார்க்கும்போது ஆளுநர் களுக்கு இருக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரங்களைக் காட்டிலும் கூடுதலானவை யாகவே உள்ளன.

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற் கான திட்டம் இருப்பது போன்று ஆளுநருக்கு எதிரான தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் கொண்டுவர இயலாது. இது அவருக்கு உரிய அதிகப்படியான அதிகாரங்களைக் காட்டும் இந்த வகையில் எல்லாம் ஆளுநரின் அதிகார எல்லை மீறலைக் கண்டு ஆளுநர் என்பவரே தேவை யில்லை என்பதான குரல்கள் 1960 முதற்கொண்டே எழுந்தன ஆட்டுக்குத் தாடியும். நாட்டுக்கு ஆளுநரும் தேவை யில்லை என்பதாக அண்ணா பகடி பேசினார்.

ஆளுநர் பொறுப்பே கூடாது என்று மறுத்தும் ஆளுநர் எங்கு வந்தாலும் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்றும், அவர் பங்கு கொள்ளும் கூட்டங்களை யெல்லாம் முழுமையாகப் புறக்கணிப்பது என்றும் அன்றைக்குத் திமுக சார்பில் அறிவிப்பும் நடைமுறையும் இருந்தது. பின்னர் படிப்படியே விட்டுவிட்டனர்.

1969இல் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது இராஜமன்னார் குழு என்ற ஒரு குழு உருவாக்கப்பட்டு இந்திய அரசு - மாநில அரசுகளுக்கு இடைப்பட்ட அதிகாரங்களின் வரம்புகள் ஆய்வு செய்யப்பட்டன. அதன்படி ஆளுநர் இந்திய அரசின் முகவராகச் செயல் படக்கூடாது என்று மறுத்தனர். அந்தக் குழுவின் அறிக்கை 1974 இல் இந்திய அரசிடம் அளிக்கப்பட்டது. ஆனால் எவ்வகை ஏற்பையும் இந்திய அரசு செய்ய வில்லை.

அதேபோல் நெருக்கடி கால ஆட்சிக்குப் பின்னர் இந்திய அரசால் உருவாக்கப்பட்ட சர்க்காரியா குழு வழி ஆளுநர் பற்றிய சில அதிகார வரம்புகள், ஆளுநர் தேர்வு

செய்யப்படுவதில் மாற்றங்கள் சொல்லப்பட்டபோதும், அவையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை..

தொடர்ந்து 2002-இல் வாஜ்பாய் ஆட்சியின்போது அரசமைப்புச் சட்டம் மறு ஆய்வு என்கிற பெயரில் அமைக்கப்பட்ட குழுவும் ஆளுநர் நேரடியாகச் சட்டமன்ற உறுப்பினர்களால்தாம் தேர்வு செய்யப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கும் அக்கருத்தும் ஏற்றுக்கொள் ளப்படவில்லை..

2007-இல் 'பூஞ்சிக் குழு' என்கிற குழுவின் அறிக் கைபடி நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான அதிகாரம் உள்ளது போல் சட்டமன்றத்தில் ஆளுநருக்கு எதிராகவும் தீர்மானங்கள் கொண்டு வருகிறபடியான அதிகாரமும் இருக்க வேண்டும் என வலியுறுத்தியும் அதுவும் ஏற்கப்படவில்லை.

இந்திய அரசமைப்புச் சட்டம் இதுவரை 101 முறை திருத்தப்பட்டும் ஆளுநர் தொடர்பான அதிகாரங்களை மீளாய்வு செய்கிறபடியாக எந்தத் திருத்தத்தையும் இந்திய அரசு செய்திடவில்லை..

**மக்கள் அதிகாரத்தையே தூக்கி வீசும் ஆளுநர் அதிகாரம்**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற அதிகாரத் தையே எந்தக் காரணமும் இல்லாமல் தன் விருப்பப்படி உடன்பாடு இல்லை என்கிற அடிப்படையில் 356-ஆவது பிரிவின்படி ஆளுநரால் கலைத்து விட முடியும்.

இன்றைய அளவில் உள்ள சட்டமன்ற ஆட்சி அமைப்பு முறை எந்தளவு அதிகாரம் படைத்தது, அது யாருக்கானது என்பதெல்லாம் ஒரு பக்கம் இருக்க இருக்கக்கூடிய அந்த அமைப்பு முறையையேகூட கலைத்து விடுகிற அதிகாரத்தை ஆளுநர்கள் வைத்திருக் கிறார்கள் என்பதே அவர்களின் உச்ச நிலை அதிகாரத் தைக் காட்டும்.

இப்படியாக இதுவரை அதாவது கடந்த 70 ஆண்டு களில் 128 முறை சட்டப் பிரிவு 356-இன்படி மொழித் தேச மாநிலங்களின் ஆட்சிகள் கலைக்கப்பட்டுள்ளன என்றால்.. ஆளுநரின் அதிகார வெறிப் போக்கை உணர்ந்து கொள்ள வேண்டும்.

16 - 6 - 1951 ஆம் நாள்தான் பஞ்சாபில் முதன் முதலில் அன்றைய காங்கிரசு ஆட்சி கலைக்கப்பட்டது. அதன் பிறகு 1953, 54, 56, 59 என வரிசையாக ஆட்சிக் கலைப்புகள் நடந்துகொண்டே இருந்தன, இருக்கின்றன.

1947 முதல் 64 வரை நேரு தலைமை அமைச்சராக இருந்த காலங்களில் 8 முறையும்,

1977 முதல் 79 வரை மொராஜி தேசாய் தலைமை அமைச்சராக இருந்த ஒன்றரை ஆண்டில் பதினாறு முறையும்,

இந்திரா காந்தி தலைமை அமைச்சராக ஆட்சி செய்த 16 ஆண்டுகளில் 50 முறைகளும் மாநில அரசுகள் கலைக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 128 முறைகளில் 88 முறை காங்கிரஸ் ஆட்சியின்போது கலைக்கப்பட்டுள்ளது.

அதே 2016 மார்ச் 27 இல் உத்தரகண்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைத்ததையும் உச்ச நீதிமன்றம் வெகு கடுமையாகக் கண்டித்ததை அறிந் திருப்போம்.

ஏற்கெனவே 1977-இல் இராசசுத்தான் மாநில அரசு கலைக்கப்பட்டதால் இந்திய அரசை உச்சநீதிமன்றத்தின் ஏழு பேர் கொண்ட அமர்வு மிகக் கடுமையாகக் கண்டித்து இருந்தது. அமீதுல்லா( உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி), சந்திக் சூட், பி.என். பகவதி, கோசுவாமி, குட்டா, உன்ட் வாலியா, பாசலால் ஆகியோரின் அறிக்கையிலும் இது பிரிட்டீசு ஆட்சியைப் போல் அல்லவா இருக்கிறது, இதுபோன்ற நடைமுறை இந்திய அரசியலில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அமர்வு இடித்துரைத்தது.

தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் கலைக்கப்பட்ட நிகழ்வுகளும் கொடுமையானவை.1976 ஊழலின் பெயராலுல் திமுக ஆட்சி கலைக்கப்பட்டதும், பின்னர் 1991இலும் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதும் முற்றிலும் மக்களாட்சிக்கு எதிரானவை.

இன்னொரு வேடிக்கையையும் சொல்ல வேண்டும். அன்றைய ஆளுநர் பர்னாலா கலைக்கவேண்டும் என அறிக்கையைத் தர மறுத்தும், குடியரசுத் தலைவர் தன் போக்காகத் தமிழ்நாட்டு அரசாட்சியைக் கலைத்த கொடுமையும் இந்திய மக்களாட்சியில் நடைபெற்றது.

**ஆளுநருக்குக் கொட்டி அழும் மக்களின் வரிப்பணம்**

இப்படியாக மக்கள் ஆட்சிக்கு எதிரான, மொழித் தேச மாநிலங்களின் உரிமைகளுக்கு வேட்டுவைக்கக்கூடிய, அதிகாரத் திமிர் படைத்த ஆளுநருக்குச் சம்பளம் இப்போது 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். இதை யார் தருவது என்றால், அந்தந்த மாநில அரசுகள் தாம் தர வேண்டுமாம்?

ஆளுநருக்கு ஆகின்ற செலவுகள் என்பவை ஏதோ ஆளுநரோடு முடிவடைவதில்லை.. அவருக்கான உதவியாளர்கள் அலுவலர்கள் எடுபிடிகள் காவலர்கள் 300, 400 பேருக்கும் மேலானவர்களுக்கும் அந்தந்த மாநில அரசுகளே சம்பளத்தைக் கொடுத்து அழ வேண்டி இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவு ஆளுநர் களுக்கான சம்பளங்களின் வழியாகவே இதுவரை 7 ஆயிரம் கோடிக்கும் மேலாகச் செலவழிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஆளுநர்களுக்கு இரண்டு இடங்களில் மாளிகை உண்டு.

சென்னை கிண்டியில் இருப்பதோடு மட்டுமல்லாமல், கோடை காலங்களில் உதகையிலும் ஓய்வு மாளிகை என்கிறபடி ஏறத்தாழ 600 ஏக்கருக்கும் மேலாகத் தமிழகத்தை நசுக்கி ஆளுகை செய்யும் ஆளுநருக்கு இடம் தரப்பட்டிருக்கிறது .

ஆளுநருக்கான சம்பளம் மட்டும் அல்ல.. அவருடைய அன்றாடச் செலவுகள் அனைத்திற்கும் தமிழ்நாடு அரசே தந்து கொண்டிருக்கிறது

இவையெல்லாம் தேவையா? என்பதை நாம் கேள்வியாக எழுப்பித்தான் ஆக வேண்டும்.

**ஆளுநர் என்கிற கங்காணியை விரட்டாமல் விடிவில்லை..**

இந்த வகையில் எல்லாம் அமர்த்தப்படும் ஆளுநர்கள் எவரும் நேர்மையானவர்களோ, மக்கள் நலன்களுக் கானவர்களோ இல்லை.

ஆளும் கட்சியினர் தங்கள் அதிகார வெறிக்கு இசைந்து கொடுக்கிற, வளைந்து கொடுக்கிற அதிகாரிகளையோ, ஓய்வுபெற்ற 'நீதிபதி'களையோதாம் ஆளுநர்களாக அமர்த்தம் செய்கிறார்கள்.

இப்போது கேரள ஆளுநராக இருக்கிறவர், உச்சநெறி மன்ற நீதிபதியாக இருந்தபோது, இப்போதுள்ள இந்திய அமைச்சர் ஒருவரை வழக்கில் இருந்து விடுதலை செய்த நன்றிக் கடனாகப் பெற்றதுதான் அந்த ஆளுநர் பதவி என்பது எல்லாருக்கும் தெரிந்த வெளிச்சமான செய்தி.

இப்படியாக ஆளுநர் ஒவ்வொருவரின் கடந்தகால இருளுக்குள்ளும் சில கருப்பு நிகழ்வுகள் இருப்பதைத் தோண்டிப் பார்த்தால் தெரியும்.

இந்தவகையில் மொழித் தேசங்கள் எவற்றுக்கும் தொடர்பற்றவராக உள்ளவர்களே ஆளுநர்கள் என்பதிலிருந்து, தமிழ்நாட்டு மக்களாட்சிக்குக் கொஞ்சமும் தொடர்பற்ற, இந்திய அரசின் கங்காணியாகச் செயல்படுகிற ஒரு அதிகார வெறியரை ஆளுநர் என்கிற பெயரில் நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னால் அதைவிட அடிமைத்தனம் ஏதுமில்லை.

**மக்களாட்சிக்கு உட்பட்ட ஓர் அரசு அமைப்பில், ஆளுநர் என்கிற ஒரு கங்காணி, எந்தவொரு மொழித்தேசத்திற்குமே தேவையில்லை என்கிற தெளிவில் ஆளுநர்களையே விரட்டியடிக்காமல் ஆளுநர் பதவி என்கிற பொறுப்பையே துடைத்தெறியாமல் மொழித் தேச மாநிலங்களுக்கு உரிமைகள் கிடைக்கப்போவதில்லை..**

**வாருங்கள்**

**ஆளுநர்கள் இல்லா**

**மக்களாட்சி அமைப்பு கொண்ட**

**மொழித் தேச மாநிலங்களை உருவாக்குவோம்!**

**தமிழகத்தை அதற்கான முன்னணித் தேசமாக நிறுத்திப் போராடுவோம்!**

# மா.பெ.பொ.க. பொதுக்குழு அழைப்பிதழ்

வரும் **11-11-2018 ஞாயிறு காலை 10 மணிக்கு** அம்பத்தூரில் சிந்தனையாளன் அலுவலகத்தில் மா.பெ.பொ.க. பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும் அதுசமயம்.

1. **6-1-2019 ஞாயிறு அன்று முற்பகல் சென்னையில் சிந்தனையாளன் 2019 பொங்கல் மலர் வெளியிடுவது எனவும்**
2. **அன்று பிற்பகல் தாய்மொழி வழிக்கல்வி மாநாடு நடத்துவது எனவும்**

**மற்றும்**

3. **மா.பெ.பொ.க.வின் எதிர்கால வேலைத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது எனவும் உள்ளோம்.**

இக்கூட்டத்திற்கு மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர்கள், மா.பெ.பொ.க. துணை அமைப்புகளின் மாநிலச் செயலாளர்கள் நகரச் செயலாளர்கள் அருள்கூர்ந்து தவறாமல் வருகைத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தோழமையுள்ள

**வே.ஆனைமுத்து**

பொதுச் செயலாளர்

சென்னை
**1-11-2018**

# உலகத்திலேயே உயரமான சிலை

- இராமியா

மக்கள் தங்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல் வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேச வைப்பதன் மூலம், தாங்கள் மக்கள் விரோதத் தன்மையையும், திறமை இன்மையையும் மறைக்க ஆதிக்கவாதிகள் முயல்வது ஒன்றும் புதிது அல்ல. சமூக இயக்கத்தைச் சரியாக வழி நடத்தும் திறமை இல்லாத இவர்கள் திசை திருப்பும் கலையில் மிகுந்த திறமை உடையவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களில் இந்தியப் பிரதமர் மோடியும், அவரது கூட்டாளிகளும் ஒப்பு உவமை இல்லாதவர்களாகத் திகழ்கிறார்கள்.



கருப்புப் பணத்தை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டு, ரூ.500, ரூ1,000 பணத்தாள்கள் செல்லாது என்று அறிவித்தார்கள். ஆனால் கருப்புப் பணம் ஒழியவே இல்லை என்று ரிசர்வ் வங்கி அறிவித்து விட்டது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் மாண்டனர். வரி விதிப்பைச் சீரமைப்பதாகச் சொல்லிக் கொண்டு, பொருள் மற்றும் சேவை வரியை (ஜி.எஸ்.டி) விதித்தார்கள். இதில் ஆயிரக்கணக்கான சிறு தொழில் நிறுவனங்கள் அழிந்து போயின. இலக்கக்கணக்கானோர் வேலை இழந்தனர்.

வங்கிகளில் கடன் வாங்கிய பெருமுதலாளிகளை வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல விடுதல், போர் விமான ஊழல், கடனை வசூல் செய்யாத வங்கி அதிகாரிக்கு உயர் பதவிக்கு ஏற்பாடு செய்தல் என்று மோடி அரசின் ஒவ்வொரு அசைவும் காவிகளின் மக்கள் விரோதத் தன்மையையும், திறமை இன்மையையும் தெளிவாக வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டு இருக்கிறது. இந்த மக்கள் விரோதத் தன்மையும், திறமை இன்மையும் மக்களிடையே விவாதப் பொருளாக ஆகி விடக் கூடாது என்பதற்காக மோடியும், அவரது கூட்டாளிகளும் பல்வேறு விதமான விவாதங்களை ஊடகங்களில் அரங்கேற்று கின்றனர்; நிகழ்வுகளை நிகழ்த்துகின்றனர். அப்படிப்பட்ட நிகழ்வுகளில் ஒன்று தான் உலகத்திலேயே உயரமான சிலை.

வரும் 31.10.2018 அன்று பிரதமர் மோடி குஜராத்தில் 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்று புகழப்படும் வல்லபாய் படேலின் 182 மீட்டர் உயரமான உருவச் சிலையைத் திறந்து வைக்கப் போகிறார். (வாசகர்கள் இக்கட்டுரையைப் படிக்கும் போது இச்சிலை திறக்கப்பட்டு இருக்கும்). இச்சிலை உலகத்திலேயே உயரமான சிலையாக இருக்கப் போகிறது. இதன் தொடர்பான விழாவை 20.10.2018 அன்று குஜராத் முதல்வர் விஜய் ருபானி தொடக்கி வைத்தார்.

காவிகள் ஏன் பட்டேலை அதிகமாகக் கொண்டாடு கிறார்கள்? அவர் தனித் தனியாகச் சிதறிக் கிடந்த 562 சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்தார். அது மட்டும் அல்ல. இந்தியாவுடன் இணையமாட்டேன் என்று அடம் பிடித்துக் கொண்டு இருந்த ஐதராபாத் நிஜாமை இராணுவத்தை அனுப்பி அடிபணியச் செய்தார் என்பதுதான் இதில் உள்ள சிறப்பு அம்சம்.

ஆனால் இந்தச் சிறப்பு அம்சத்தில் திட்டமிட்டு மக்களிடம் இருந்து மறைக்கப்பட்ட செய்திகள் உள்ளன. ஆனால் இவற்றை வெளிக் கொணர, தர்க்க ரீதியான எளிய வினாக்களே போதுமானவை. ஐதராபாத் சமஸ்தானத்திற்கு 12.9.1948 அன்று இந்தியா இராணுவத்தை அனுப்பியது. அடுத்த ஐந்து நாட்களில் அதாவது 18.9.1948 அன்று நிஜாம் சரண் அடைந்து விட்டார். ஆனால் இந்திய இராணுவம் 21.10.1951 வரை போராடிக் கொண்டு இருந்தது. இது யாருடன்? ஏன்?

இதற்கு விடை கூற வரலாற்றுப் பாடத்தை முக்கியப் பாடமாக எடுத்துப் படித்த மாணவனாலும் முடியாது. ஏனெனில் அந்த அளவிற்கு அங்கு நடந்த நிகழ்வுகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு உள்ளன. விவசாயிகள் என்போர் இந்நாட்டின் புறக்கணிக்கப்பட்ட குடிமக்களாகவே எப்பொழுதும் இருந்து வருகின்றனர். ஐதராபாத் சமஸ்தானமும் இதற்கு விதி விலக்கு அல்ல. அந்த சமஸ்தானத்திற்கு உட்பட்ட தெலுங்கானாப் பகுதியில் இருந்த விவசாயிகள் இதற்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினர். அவர்களை எல்லாம் நிஜாமின் படைகளும், பண்ணையார்களின் அடியாட்களும் கடுமையான முறையில் ஒடுக்கினர். இந்த அடக்கு முறையில் தொட்டி கொமரய்யா என்ற விவசாயி 6.7.1946 அன்று கொல்லப்பட்டுவிட்டார். இது தெலங்கானா விவசாயிகள் அனைவரையும் கொதித்து எழச் செய்து விட்டது. அவர்கள் ஒன்று திரண்டு, காவல்

நிலையங்களில் இருந்தும், நிஜாமின் படைத் தளங்களில் இருந்தும் ஆயுதங்களைக் கைப்பற்றி, நிஜாமுக்கும் பண்ணையார்களுக்கும் எதிராகப் போராடத் தொடங்கிவிட்டனர். இதில் சிறப்பு அம்சம் என்னவென்றால் பெண்களும் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு ஆண் களுக்கு நிகராகப் போரில் ஈடுபட்டனர். இதனால் மிரண்டு போன பண்ணையார்கள் கிராமங்களை விட்டு ஓடி ஐதராபாத்தில் தஞ்சம் புகுந்தனர். நிஜாமும் ஐதராபாத் நகரை விட்டு வெளியே போவதைத் தவிர்த்துக் கொண்டார்.

பண்ணையார்கள் இல்லாத கிராமங்களில், விவசாயிகள் ஒன்று சேர்ந்து, குழு (கம்யூன்) அமைத்து, நிலங்களைப் பகிர்ந்து கொண்டு விவசாயம் செய்தனர்; விளைச்சலைத் தங்களுக்குள் முறையாகப் பகிர்ந்து கொண்டனர். சுருக்கமாகச் சொன்னால் தெலுங்கானா கிராமங்களில் சமதர்ம (சேஷலிச) அமைப்பு செயல்பட்டுக் கொண்டு இருந்தது.

இந்நிலையில் தான், 15.8.1947 அன்று ஆங்கிலே யர்கள் இந்தியர்களிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு நாட்டை விட்டு வெளியேறினார்கள். அவ்வாறு வெளி யேறும் போது 562 சுதேசி சமஸ்தானங்களையும் தனித் தனியாகவே விட்டு விட்டுச் சென்றனர். புதிய ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்த வல்லபாய் படேல் அனைத்துச் சமஸ்தானங்களையும் இந்தியாவுடன் இணையுமாறு அழைப்பு விடுத்தார். திருவாங்கூர், ஐதராபாத் சமஸ்தானங்கள் இந்த அழைப்பை ஏற்க மறுத்தன. அவற்றில் திருவாங்கூர் சமஸ்தானம் பேச்சு வார்த்தை மூலமாக இணைய ஒப்புக் கொண்டது. ஆனால் ஐதராபாத் சமஸ்தானம் ஒப்புக் கொள்ளாமல் முரண்டு பிடித்தது. முரண்டு பிடித்த நிஜாமைப் பணிய வைக்க வல்வபாய் படேல் இராணுவத்தை அனுப்பினார். இராணுவம் வந்த ஐந்தே நாட்களில் நிஜாம் சரண் அடைந்துவிட்டார்.

சமதர்ம அமைப்பில் வாழ்ந்து கொண்டு இருந்த தெலுங்கானா விவசாயிகள் இந்திய அரசின் கீழ் இருப்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆனால் இந்திய அரசோ நிலங்களை மீண்டும் பண்ணையார் களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், விவசாயிகள் பண்ணையார்களை அண்டியே வாழ வேண்டும் என்றும் கூறிவிட்டது. இதை ஏற்றுக் கொள்ள விவசாயிகள் மறுத்து விட்டனர். இதைத் தொடர்ந்து விவசாயிகள் மீது இந்திய அரசு இராணுவத்தை ஏவி விட்டது. மிகக் குறுகிய காலத்தில் நிஜாமின் இராணுவத்தையும், பண்ணையார் களின் அடியாட்களையும் வெற்றி கண்ட விவசாயிகளால், வலிமை மிக்க இந்திய இராணுவத்தை எதிர் கொள்ள முடியவில்லை. ஆனாலும் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக முறையான போர்ப் பயிற்சி இல்லாத விவசாயிகள் வலிமை மிக்க இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டனர். அதன் பின் 21.10.1951 அன்று தங்கள் போராட்டத்தைக் கைவிடுவது என முடிவெடுத்தனர். வீரம் செறிந்த இப்போராட்டம் வரலாற்று மாணவர்கள் கூட அறிந்து கொள்ள முடியாத வகையில் இருட்டடிப்புச் செய்து வைக்கப்பட்டு உள்ளது கொடுமையிலும் கொடுமை ஆகும்.

**உலகத்திலேயே உயரமான சிலை வைக்கப்படும் இவ்வேளையில், வல்லபாய் பட்டேலின் சிறப்புக்குக் காரணமாகச் சொல்லப்படும் ஐதராபாத் இணைப்பு நிகழ்வில் மறைக்கப்பட்டு உள்ள தெலுங்கானா விவசாயிகளின் வீரம் செறிந்த போராட்டத்தை நினைவு கொள்வோம்.**

# கருத்துரிமை மாநாடு

18.10.2018 அன்று காலையிலிருந்தே கலை, இசை நிகழ்ச்சிகளுடன் தொடங்கிய ‘கருத்துரிமை மாநாட்டை’ அண்ணாசாலை, தேனாம்பேட்டை காமராசர் அரங்கில் இந்திய பொதுவுடைமைக் கட்சி மார்க்சிஸ்ட்டின் வெகுமக்கள் தொடர்பு அமைப்பான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. முதல் அமர்வாக ‘ஒன்றுகூடல்’ என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அக்கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி தொடக்கவுரை நிகழ்த்தினார். சங்பரிவார மோடியின் ஆட்சியை அகற்றி, நாட்டை மதவெறியர்களிடமிருந்து விடுவித்து காப்பாற்றிட இடதுசாரிகளும் ஒத்த கருத்துடைய அனைத்துப் பிற கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றார்.

தொடர்ச்சியாக இரவு 9 மணி வரையிலும் பல்வேறு அமர்வுகள் வெவ்வேறு தலைப்புகளுடன் நிகழ்த்தப்பட்டன. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், திரைத்துறை, ஊடகத் துறையைச் சார்ந்தோர் பங்கேற்றனர். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இடதுசாரித் தலித் சிந்தனையாளர், பெரியார் பற்றாளர் தோழர் காஞ்ச அய்லையா தமிழ்நாட்டில் பெரியாரை முன்னி ருத்தாத அரசியல் இருக்க முடியாது என்றும், இடதுசாரிகள் ஒருங்கிணைந்து பெரியார், அம்பேத்கர், சாவித்திரி பாய் புலே, சோதிபா புலே, மார்க்சு கொள்கைகளை மக்களிடம் பரப்பிட வேண்டியதின் இன்றியமையாமையை வலியுறுத்தினார். அவ்வழியில் சங்பரிவார மோடி ஆட்சியை அகற்றிட வேண்டு மென்றார்.

இறுதி நிகழ்வாக, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கு நிகழ்ந்த போராட்டத்தில் காவலர் துப்பாக்கிச் சூட்டில் பலிவாங்கப்பட்ட 13 பேரை நினைவுகூரும் வகையில் 13 முளைப்பாரிகள் அரங்க மேடையில் வைக்கப்பட்டது. நிகழ்ச்சிகளில் பங்கேற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்டோரால் போர்க்குரல் எழுப்பப்பட்டு குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றி தண்டனை அளிக்க வேண்டும் என சூளுரைக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவுற்றது.

# சிந்தனைச் சிற்பி
# சிங்காரவேலர்-159

குட்டுவன்

தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து தனது கல்வியாலும் அறிவாலும் சிந்தனைத் திறத்தாலும் அகில இந்திய அளவில் உயர்ந்த ஒப்பற்ற சிந்தனையாளர் சிங்காரவேலர் ஆவார். இந்தியாவினுடைய பொதுவுடைமை இயக்கத்தின் முதல் நிறுவனர்களில் ஒருவர்.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் - குறள் 664

என்ற குறளுக்கு இலக்கணமாய் இலக்கியமாய் வாழ்ந்து மறைந்தாலும் அவரது சிந்தனைகள் மறு வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய காலக்கட்டத்தில் தமிழ்நாடு உள்ளது.

விடுதலைப் போராட்ட வீரரும் மார்க்சியச் சிந்தனையாளருமான க.ரா.ஜமதக்னி அவர்கள் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரோடு ஒரே அறையில் சிறைவாசம் இருந்த பெருமை உண்டு. பல முறை என்னிடம் க.ரா.ஜமதக்னி சிங்காரவேலரின் சிறப்புகளைப் பகிர்ந்துள்ளார். க.ரா.ஜமதக்னி சிறை சென்ற போது சிங்காரவேலர், காசநோயால் உடல்நலம் பாதித்து நோயுற்ற நிலையில் இருந்தார். அப்போது அதே சிறையில் ராஜாஜியும் இருந்தார். ராஜாஜி ஜமதக்னியைப் பார்த்து சிங்கார வேலரின் அறைக்குள் தங்க வேண்டாம் என்று கூறினாராம். ராஜாஜியின் பேச்சைக் கேட்காமல் சிங்காரவேலரின் அறையிலேயே தங்கினேன் என்று ஜமதக்னி கூறினார்.

ஒரு மடலில் க.ரா.ஜமதக்னி - விடுதலைப் பேராட்டத்தில் பல ஆண்டுகள் சிறையில் கழித்தேன் இந்தியா விடுதலை பெற்றது. அப்போராட்டத்தில் சிறை புகுந்த போது பொதுவுடைமைச் சிற்பியான சிங்காரவேலுவைச் சந்தித்தேன். முதுமைப் பருவத்தில் காசநோயால் அவதியுற்ற சிங்காரவேலருக்குச் சிறையில் எல்லாப் பணிகளையும் செய்தேன். அப்போது காங்கிரசு இயக்கத் தலைவர்கள் சிங்காரவேலுவிடம் பேசாதே உனக்கு விஷத்தை (பொதுவுடைமை நெறியை) ஊட்டி விடுவார் என்று கூறுவார்கள். பொதுவுடைமைச் சிற்பியோ சிறையில் தனக்குத் தரப்பட்ட மாமிச உணவை எனக்கு அன்புடன் அளிப்பார். அறிவுப் பசிக்கு மார்க்சிய உணவை ஊட்டினார். எனவே வாழ்நாள் முடிவதற்குள் கார்ல் மார்க்சின் மூலதனத்தைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குத் தருவது எனது தலையாய கடமையாகும்'' என எழுதிய குறிப்பை மூலதனம் மிகைமதிப்பு மொழியாக்க நூலின் பதிப்பாசிரியரின் உரையில் இக்கட்டுரையாசிரியர் பதிவு செய்துள்ளார்.

இன்றைய இந்தியாவில் பிற்போக்குத்தனமான மதவாத மூடநம்பிக்கை நிறைந்த அரசியல் ஒன்றிய அரசின் ஆளும் சக்தியாக அமைந்தது முற்போக்கு



இயக்கங்களுக்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவாகும். வரும் காலத்தில் முற்போக்கு இயக்கங்கள் ஒன்று கூடி மக்களாட்சி கூட்டாட்சி இயல், மதசார்பற்ற உணர்வுகள் மீண்டும் அரசியலில் இடம் பெறுவதற்கு பெரும் களத்தை அமைக்க வேண்டிய சூழல் உள்ளது. சிங்காரவேலரின் சிந்தனைகளை மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தி, அவர் வாழ்நாளில் வலியுறுத்திய பகுத்தறிவு, பொதுவுடைமை நெறிகளை இளைஞர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய பெரும் கடமை உள்ளது.

காங்கிரசு இயக்கத்தில் காந்தியார் தலைமையில் இணைந்தாலும் அவர் தனது கருத்துகளை யாருக்கும் அஞ்சாமல் வெளியிட்டார். காந்தி விடுதலை இயக்கத்தை இந்து சமய மீட்சி இயக்கமாக நடத்துவதாகவும் நாளடைவில் ஆங்கிலேயர்களிடமும் சுரண்டும் பூர்ஷ்வா வர்க்கத்தினரிடமும் சமரசம் செய்து கொண்டு விடுவார் என்று, இந்தியாவின் மூத்த மார்க்சிய சிந்தனையாளரான எம்.என். ராய் பேசியும் எழுதியும் வந்தார். முதல் அகில உலக கம்யூனிஸ்ட் மாநாட்டில் காந்தி நல்ல நேர்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பாளர் என்று லெனின் வைத்த மதிப்பீட்டை எம்.என்.ராய் ஏற்கவில்லை. இந்தக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட சிங்காரவேலர் காந்தியின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளையும் ஏற்கவில்லை. குறிப்பாக, தர்மகர்த்தா முறை, கதர்க் கொள்கை ஆகியவற்றைச் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் ஏற்கவில்லை. 1925 முதல் 1936 வரை சிங்காரவேலர் எழுதிய கட்டுரைகளில் இக்கருத்துகளைக் காண முடியும்.

சிங்காரவேலர் அறிவியல் கண்டுபிடிப்புகளையும் அதனுடைய தாக்கங்களையும் கட்டுரைகளாக எழுதி யுள்ளார். சிங்காரவேலர் அறிவியல் சார்ந்த பகுத்தறி வையும், பொருளாதாரக் கொள்கையில் காரல் மார்க்சு பற்றிய அறிவியல் சமதர்மத்தையும் போற்றி வளர்த்தார். இந்த இரு கருத்துருக்களுக்கும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரே முன்னோடி எனலாம்.

26.12.1931இல் தந்தை பெரியார் தலைமையில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சென்னை சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் சிங்காரவேலரின் உரை தனித்தன்மையானது. அறியாமை இருள் இருப்பதால்தான் எல்லா மதங்களும் தத்துவங்களும் சாத்திரங்களும் இயக்கங்களும் இந்த நாட்டில் தோன்றியுள்ளன....மதங்களே அறியாமையில் இருந்து புறப்பட்டவை. சாதி இந்தியாவில் முளைத்த ஒரு கற்பனை என்று கூற வேண்டும்... எனக்கோர் வழித் தோன்றுகிறது.

பகுத்தறிவை உயர்கல்வி மூலமாக வளரச் செய்ய வேண்டும் என்பது இதிலும் கஷ்டம் இருக்கிறது. சென்ற 50 ஆண்டுகளாக உயர் தரக் கல்வியில் தேர்ச்சியடைந்து வரும் பிராமணர்கள் சாதியை விட்டபாடில்லை. நமது இராஜகோபாலாச்சாரியும் சத்தியமூர்த்தியும் பூணுலைக் கழட்டி எறிந்தார்களா? இல்லையென்றால் எங்கே உயர் தரக்கல்வியின் பயன்?... பாமர மக்களுக்குச் சுடரொளி யாக உங்கள் இயக்கம் (திராவிட இயக்கம்) வந்துள்ளதாக எண்ணுகிறேன். நீங்கள்தான் இந்த ஆயிரம் தலை யுடைய விஷப்பாம்மை நசுக்க வேண்டும். உங்களால் ஆகாவிட்டால் உலகிற்கு இனி எந்த நம்பிக்கையும் கிடையாது....சமதர்மமே அதாவது மதமற்ற சாதி வேற்றுமையற்ற, பொருளாதார வேற்றுமையற்ற தர்மமே நமது நாட்டையும் மற்ற நாடுகளையும் காப்பற்ற உள்ள இயக்கமாகும் (சிங்காரவேலர் சொற்பொழிவு புலவர் ப.வீரமணி 2014). சிங்காரவேலரின் தொலை நோக்குப் பார்வை இன்றைய சமூக அரசியல் நிகழ்வு களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தந்தை பெரியாரையும் திராவிடர் இயக்கத்தையும் அவர் செய்த மதிப்பீடு எவ் வளவு துல்லியமானது என்பதைப், புரிந்து கொள்ளலாம்.

28.8.1931இல் குடிஅரசு இதழில் சிங்காரவேலர் மதங்களால் உண்டாகும் பொருளாதார கஷ்டங்களுக்கு அளவே கிடையா. கோயில்கள் எத்தனை! தெப்பங்கள் எத்தனை! விக்கிரகங்கள் எத்தனை! உழைப்பின்றி வாழும் சிப்பந்திகள் எத்தனை! தாசி வேசிகள் எத்தனை! இவ்வளவு செல்வமும் யாருக்குமே நற்பிரயோசன மின்றிப் போவதைப் பயனற்ற அர்ச்சனைகளுக்கும் உற்சவங்களுக்கும் செலவாகும் பணத்தைக் கொண்டும் ஊரில் செய்தால் நிலங்களைச் சீர்படுத்தலாமே; ஊரில் நீர்வளங்களை உண்டாக்கலாமே என்று கூறியுள்ளார்.

இன்று நடப்பதென்ன? உச்ச நீதிமன்றம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளைப் போற்றும் வண்ணம் ஆண்-பெண் அனைவரும் ஆண்டவன் முன் சமம் என்று கூறிய பின்பும் ஐயப்பன் கோயிலுக்குள் 10 முதல் 50 வயது பெண்கள் செல்லக் கூடாது என்று கூறுவது-அதை நியாயப்படுத்தி ஊடகங் களில் சிலர் பேசுவது எவ்வளவு அடாவடித்தனம் என்பதை எண்ணும்போது சிங்காரவேலரின் சிந்தனை இருளைப் போக்கும் ஒளியாக அல்லவா அமைகிறது.

இந்து மதத்தில் பொய்யாகப் பரப்பி இன்றும் வணிகம் பார்க்கும் ஆன்மாவைப் பற்றி 1931இல் அவர் எழுதிய கட்டுரையில் தோலுரித்துக் காட்டியுள்ளார். செல்வி. ஜெயலலிதா மறைந்தபின் இன்றைய துணை முதல்வர் ஓ.பி.எஸ். அவரது நினைவிடத்தில் அமர்ந்து தியானம் புரிந்தார். முதல்வர் எடப்பாடியைப் பார்த்து அம்மாவின் ஆன்மா மன்னிக்காது என்று கூறினார். சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற மகாளய அமாவாசையின் போது தமிழக அமைச்சர் ஓ.எஸ்.மணியன் அரை நிர்வாணக் கோலத்தில் காவிரிக் கரையில் அமர்ந்து கொண்டு ஜெயா அம்மாவின் ஆவி சாந்தியடைய ஐயர் முன்னிலையில் தர்ப்பணம் அளித்தார். எந்தக் காலத்தில்? எந்த நேரத்தில்? அறிவியல் தொழில்நுட்பப் புரட்சி மேலோங்கி உலகில் மட்டுமல்லாது விண்வெளியில் நடக்கும் நிகழ்வுகளை நம் கண் முன்னே நிறுத்தும் இணைய வழி வந்த பிறகும் ஆன்மா வழியைத் தேடுவது எவ்வளவு கயமைத்தன மான செயல் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதச்சார்பின்மைக் கருத்தைக் காவிரியில் கரைக்கிறார் மணியன்.

1931இல் சிங்காரவேலர் கூறிய ஒரு கருத்தியல் நமக்கு வியப்பளிக்கிறது. "இந்துமதக் கோட்பாடுகளில் ஆன்மா பெரும் பங்கு வகிக்கிறது. குரங்கு ஒரு கிளையை விட்டு மறு கிளையைத் தாவிப் பிடிப்பது போன்று ஆஸ்திகன் கடைசி கிளையாகிய பிரக்ஞை (உள்ளுணர்வு) அடைவது என்பது ஒரு கற்பனையாகும். அதுவும் கடவுள், ஆன்மா, உயிர் போன்றவை கற்பனைச் சொற்களே. பிரக்ஞை ஒரு தனிப்பொருள். பிரக்ஞை என்பதும் நாவும் உதடும் குரலும் மற்றும் சில உடல் உறுப்புகளின் அசைவின் பயனே என்று கூறப்படும். உரத்துப் பேசினால் அது தான் பேச்சு. மெதுவாகத் தனக்குத்தானே பேசினால் அதுதான் பிரக்ஞை. எண்ணம் நினைவு என்று கூறல் வேண்டும் என்கின்றனர் விஞ்ஞானிகள்...விஞ்ஞானம் அடைந்துவரும் ஒவ்வொரு வெற்றியும் நாஸ்திகத்தைப் பலப்படுத்திக் கொண்டு வருகிறது".

இன்றைய உலகில் நடைபெறும் இயற்கைச் சீற்றங் களால் மக்களுக்கு ஏற்படும் சீரழிவுகளை மாற்ற வேண்டும் என்றால் உயிர்பன்மம் (Bio-diversity) வளர்க்கப்பட வேண்டும். ஆனால் சிங்காரவேலர் இதே கருத்தை 1935இல் எதிரொலித்துள்ளார். உலகம் வறண்டு போகிறதா என்ற தலைப்பில் சைன்டிஸ்ட் (Scientist) என்ற பெயரில் எழுதியுள்ளார். பூமி வறண்டு

வருவதற்கு இன்னொரு காரணம் உண்டு. காடுகளை அழிக்கும் காரணத்தினால் குளிர்ச்சியாக இருக்க வேண்டிய இடங்கள் வறட்சியடைகின்றன. மழைத்துளி பூமி மேல் பட ஆகாயத்தில் ஈரம் நிறைந்திருக்க வேண்டும். அதற்கு முக்கிய ஆதாரம் அடர்ந்த காடு. இவ்விதமாக காடுகளின் அழிவாலும் மழை குறைவதாலும் புல் பூண்டு தங்கவிடாமல் பூமியை உழுவதாலும் நாடுகள் வறண்டு விடும் என்பதில் சந்தேகமில்லை (தொகுதி-3 பக்.3) என்று குறிப்பிடுகிறார். ''அக்கட்டுரையின் முடிவில், நமது பூமியும் சந்திரனுடைய கதி அடையும் காலை பூமி மேலுள்ள காற்றும் பூமியில் உள்ள நீரும் ஒழிந்து போய்விடும். நமது பூமி அந்தக் காலத்தில் காற்றற்று நீரற்று உயிரற்றுப் போய்விடும். அந்தக் காலம் வருவதற்கு நெடுநாள் பிடிக்கும். ஆனால் நமது அறியாமையால் அந்தக் கேட்டை நாமே சீக்கிரம் வரவழைப்போம் போல் காண்கிறது'' என்று நுண்மாண் நுழைப்புலத்தோடு சிங்காரவேலர் எடுத்தியம்பியுள்ளார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு வட்டார அளவில் போர்கள் நடைபெற்று வருகின்றன. அப்போர்களின் விளைவாக ஒவ்வொரு நாடும் நாட்டின் பாதுகாப்பிற்காகத் தொழில்நுட்பம் நிறைந்த புதுப்புது ஆயுதங்களைக் குவித்து வருகின்றன. உலக அளவில் ஆயுத வணிகம் பல இலட்சம் கோடி அளவைத் தாண்டி விட்டது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்பட வேண்டிய நிதியாதாரங்கள் அழிவிற்கான அடித்தளமாக அமைகின்ற ஆயுதப் போட்டியில் முடிவடைகிறது. தற்போது இந்தியாவின் பாதுகாப்பிற்கு என்று கூறி ரபேல் விமானம் பல்லாயிரம் கோடி அளவிற்கு மோடி அரசு வாங்க முடிவு செய்துள்ளது. இந்த ஆயுதக் கொள்முதலிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது என்பதைப் பல ஆதராங்களைச் சுட்டிக்காட்டி காங்கிரசு குற்றம் சாட்டுகிறது.

சிங்கார வேலர் போரினால் ஏற்படும் பொருளாதாரச் சீரழிவுகளைச் சுட்டிக்காட்டி, போர்கள் இல்லாத உலகை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். சிங்காரவேலர் சுட்டிய ஒவ்வொரு முனைப்பான கருத்தும் இன்றையக் காலக்கட்டத்தில் களம் அமைப்பதற்குக் கருவியாகப் பயன்படும். சிங்காரவேலர் மறைந்த போது தந்தை பெரியார்-சுயமரியாதைச் சுடரொளி தமிழ்நாட்டில் வீச ஆரம்பித்த காலத்தில் பக்கத்தில் இருந்த படைத் தளபதிகளில் பெருமைக்குரியவர் தோழர் ம.சிங்காரவேலர். 86 வயது நிரம்பிய கிழப்புலியின் மறைவு கேட்டு திராவிடம் திடுக்கிட்டது அவர் அளித்துப் போன அறிவுக் கருவுலங்கள் திராவிடர் கரங்களை மட்டுமல்ல கருத்தையும் கவின் பெறச் செய்தனவாகும் (16.2.1946) என்று குறிப்பிட்டார்.

பேரறிஞர் அண்ணா, இந்தியாவிலேயே விஞ்ஞான அறிவுக்கலை சம்பந்தமாகவும் பொதுவுடைமை சம்பந்தமாகவும் அதிகம் படித்துப் புரிந்து கொண்டு அந்த அறிவைக் கொண்டு மற்றவர்களுக்கும் அதைப் புரியும்படியாகச் செய்த பெருமைக்குரிய இடத்தில் முன்வரிசையில் முதலிடம் அவருக்கே அளித்தாக வேண்டும். ஏகாதிபத்தியம், மதவாதம் இரண்டுமே முடக்குவாத நோய்தான் சமுதாயத்திற்கு என்பதை அவர் எவருக்கும் அஞ்சாது கூறினார் என்று குறிப்பிட்டார்.

முடக்குவாத நோய்கள் இந்திய சமுதாயத்தில் பற்றிக் கொண்டுள்ள இந்நேரத்தில் சிங்காரவேலரின் சிந்தனையைப் பரப்ப வேண்டியது ஒவ்வொரு இனமான உணர்வுள்ள தமிழரின் கடமையாகும்.

(சிங்காரவேலர் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்வு 19.10.2018 அன்று சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் தமிழ் இலக்கியத் துறையின் சார்பில் நடைபெற்ற சிங்காரவேலர் 159 பிறந்த நாள் விழாவாக நடைபெற்றது. இவ்விழாவில் சிங்காரவேலர் அறக்கட்டளையின் சார்பில் புலவர் ப.வீரமணி வரவேற்புரை நிகழ்த்தினார். இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் செயலாளர் திரு.சீதாராம் யெச்சூரி சிங்காரவேலரின் கருத்துகளை இக்காலக்கட்டத்தோடு ஒப்பிட்டு ஒரு சிறந்ததொரு உரையை நிகழ்த்தினார். இந்நிகழ்விற்கு பேராசிரியர் மு.நாகநாதன் தலைமை தாங்கினார். தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் ஒப்பிலா.மதிவாணன் நன்றியுரை நிகழ்த்தினார். இக்கட்டுரை பேராசிரியர் மு.நாகநாதன் 2018இல் நடைபெற்ற சிங்காரவேலைர் அறக்கட்டளைச் சார்பாக ஆற்றிய உரையின் கருத்துச் சுருக்கமாகும்). ❖

## தமிழியக்கம் தொடக்க விழா

15.10.2018 அன்று காலையிலிருந்து தொடர் நிகழ்வாக சென்னை பாரிமுனையிலுள்ள அண்ணாமலை மன்றத்தில் வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழக வேந்தரால் தொடக்கப்பட்ட 'தமிழியக்கம்' பெரும் விழாவில்... மாலை அமர்வில் தோழர் வே.ஆனைமுத்து அமர்வில் கலந்து கொண்டார். பெரியார் தமிழ்மொழிக்கு ஆற்றிய பல்வேறு சிறப்பான பணிகளை நாள், திங்கள், ஆண்டு விவரங்களுடன் நிரல்படுத்தி தெளிவாக தோழர் வே. ஆனைமுத்து எடுத்துரைத்தார். மன்றம் நிறைந்த மக்கள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடன் செவிமடுத்தனர். திராவிடக் கழகத் தலைவர் தோழர் கி. வீரமணி தலைமையேற்ற அந்த அமர்வில் தமிழ் மக்களின் மேம்பாட்டுடனான வளர்ச்சியுடன் தமிழ் மொழி வளர்ச்சி வென்றெடுக்கப்படுவதின் தலையான பெரியாரின் கொள்கையை விளக்கி தோழர் கி. வீரமணி தன் தலைமையுரையில் தெளிவாக எடுத்துரைத்தார். இவ்விருபெரும் பெரியாரின் இயக்க வழித் தோன்றல்களும் ஒரே நிகழ்ச்சியில் இணைத்து பங்கேற்று விழாவைச் சிறப்பித்தது ஒரு குறிப்பிடத்தக்க நேர்வாகும். விழாவில் மா.பெ.பொ.க. தலைமைக்குழு உறுப்பினர் தோழர் க. முகிலன், மாநிலத் தொழிலாளர் அணிச் செயலாளர் தோழர் சா.குப்பன், இரா.பச்சமலை, வேலூர் மீ.டில்லிபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இடஒதுக்கீட்டுக்கு எதிரான ஆளும் வர்க்கத்தின் சூழ்ச்சிகளைப் பிற்படுத்தப்பட்டோரும் பட்டியல் வகுப்பினரும் ஒன்றிணைந்து முறியடிப்போம்

— க. முகிலன்


இந்திய அரசமைப்புச் சட்டம் 1950 சனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது முதற்கொண்டே இடஒதுக்கீடு குறித்த வழக்குகள் உயர் நீதிமன்றங்களில் நடந்து வருகின்றன. அத்துடன் கடந்த நூறு ஆண்டுக்காலத்தில் அரசியலில், அரசு வேலைகளில் இடஒதுக்கீடு என்கிற கோட்பாடு இந்திய அரசியலில் ஒரு முதன்மையான கூறாக இயங்கி வருகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆளும் வகுப்பினராக அனைத்து அதிகாரங்களையும் தங்கள் முற்றுரிமையாகக் கொண்டிருந்த பார்ப்பன - சத்திரிய - பனியா மேல்சாதியினர் இடஒதுக்கீட்டின் மூலமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல்குலத்தினர், பழங்குடியினர் ஆகியோர் அதிகாரத்தில் பங்கு கேட்பதையும் தங்களுக்குப் போட்டியாளர்களாக வருவதையும் தடுப்பதற்காக எல்லா வகையிலும் முயன்று வருகின்றனர்.

சென்னை மாகாணத்தில் அரசு வேலையிலும் உயர் கல்வியிலும் 1947 முதற்கொண்டே பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு நடப்பில் இருந்தது. 1950இல் இதன் அடிப்படையில் மருத்துவக் கல்வியில் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கல்வியில் இடஒதுக்கீடு அளிப்பதற்கான விதி இல்லை என்றும், இடஒதுக்கீட்டின் காரணமாகத் தனக்கு மருத்துவக் கல்வியில் இடம் கிடைக்கவில்லை என்றும் செண்பகம் துரைராசன் என்கிற பார்ப்பனப் பெண் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

கல்வியில் இடஒதுக்கீடு அளித்தது செல்லாது என்று 1950 சூன் மாதம் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றமும் இதை உறுதி செய்தது. கல்வியில் இடஒதுக்கீடு அளிக்கும் வகையில் சட்டத்தில் விதி செய்ய வேண்டும் என்று பெரியார் மாபெரும் போராட்டம் நடத்தினார். இதன் விளைவாக கல்வியில் இடஒதுக்கீடு அளிப்பதற்கான விதி 15(4) என்பது 1.6.1951 அன்று அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. பெரியாரின் போராட்டத்தால்தான் இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட, பட்டியல்குல, பழங்குடி வகுப்பினருக்குக் கல்வியில் இடஒதுக்கீட்டு உரிமை கிடைத்தது.

அரசு வேலைகளில் இடஒதுக்கீடு அளிப்பதற்கான விதி 16(4) என்பது மேதை அம்பேத்கர் தலைமையில்



பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீட தரமறுத்த நேரு

உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றிருந்தது. இதன்படி 1950 முதல் பட்டியல் குலத்தினருக்கும் பழங்குடியினருக்கும் வேலையில் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு அளிக்கப்படவில்லை. அரசமைப்புச் சட்ட விதி 340-இன்படி, 1953-இல் காகாகலேல்கர் தலைமையில் அமைக்கப்பட்ட முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரைத்தபடி, அரசு வேலைகளில் பிற்படுத்தப்பட் டோருக்குப் பிரதமர் நேரு இடஒதுக்கீடு அளிக்க மறுத்து விட்டார். மேலும் சாதி அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு அளிக்கக்கூடாது என்று 1961இல் பிரதமர் நேரு மாநில முதலமைச்சர்களுக்கு மடல் எழுதினார். பார்ப்பனரான நேருவும், பார்ப்பன உயர் அதிகார வர்க்கமும் இடஒதுக்கீட்டின் மூலம் பிற்படுத்தப்பட்டவர்கள் முன்னேறுவதை வஞ்சகமாகத் தடுத்தனர்.

நடுவண் அரசு வேலைகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு விதி 16(4)இல் வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டு உரிமையைச் செயல்படுத்திட வழிகாண வேண்டும் என்ற குறிக்கோளுடன், தோழர் வே.ஆனைமுத்துவும்



பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கியதால் ஆட்சியையே இழந்த பெருந்தகை வி.பி.சிங்

தோழர்களும் 29.4.1978 தில்லிக்குச் சென்றனர். பீகார் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் இராம் அவதேஷ்சிங் மற்றும் பலருடன் மேற்கொண்ட முயற்சிகளாலும், போராட்டங்களாலும் பி.பி. மண்டல் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசு வேலைகளில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்கிற மண்டல் குழுவின் அறிக்கை 1980இல் அளிக்கப்பட்ட போதிலும், பார்ப்பன-மேல்சாதி ஆதிக்கவர்க்கம் அது செயல்பாட்டுக்கு வராமல் தடுத்து வந்தது.

பிரதமர் வி.பி. சிங் ஆட்சியில் 13.8.1990 அன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசு வேலைகளில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேல்சாதியினரும் பா.ச.க.வினரும் இதை எதிர்த்து வடஇந்தியா முழுவதும் வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். பா.ச.க. வி.பி. சிங் ஆட்சியைக் கவிழ்த்தது. பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. 1991இல் பிரதமராக வந்த பார்ப்பனரான பி.வி. நரசிம்மராவ், 25.9.1991 அன்று இடஒதுக்கீட்டுப் பிரிவில் இடம்பெறாத மேல்சாதியினருள் உள்ள ஏழைகளுக்கு பத்து விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கும் அரசாணையை வெளியிட்டார். இதை எதிர்த்தும் வழக்குத் தொடுக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டவர் இடஒதுக்கீடு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நடந்த வழக்கு இந்திரா சஹானி மற்றும் பிறர் எதிர் ஒன்றிய அரசு வழக்கு எனப்பட்டது. இது மண்டல் வழக்கு என்றும் கூறப்பட்டது. இந்த வழக்கைத் தலைமை நீதிபதி எம்.எச். கனியா தலை மையில் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித் தது. இந்த வழக்கில் 16.11.1992 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பில் அரசமைப்புச் சட்டம் பிரிவு 16(4)இன் கீழ் சாதி அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்தது செல்லும் என்று கூறப்பட்டது. அதேசமயம் மேல்சாதியினரில் பொருளாதார அடிப்படையில் 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியது செல்லாது என்றும் இத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் இடஒதுக்கீட்டை முடமாக்கும் வகையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருள் பொருளாதாரத்தில் வளர்ந்த பிரிவினருக்கு (Creamy Layer) இடஒதுக்கீடு அளிக்கக்கூடாது என்று நீதிபதிகள் கூறினர். இதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருள் பின் தங்கிய நிலையில் இருப்பவர்கள் இடஒதுக்கீட்டின் மூலம் முன்னேற வாய்ப்பு கிடைக்கும் என்று நீதிபதிகள் விளக்கம் அளித்தனர்.

மற்றுமோர் கேடான தீர்ப்பையும் நீதிபதிகள் வழங்கினர். பிரிவு 16(4) பதவி உயர்வில் இடஒதுக்கீடு செய்வதை அனுமதிக்கவில்லை; அதனால் பதவி உயர்வில் இனி இடஒதுக்கீடு அளிக்கக்கூடாது என்று தீர்ப்பளித்தனர். பட்டியல் குலத்தினருக்கும், பழங்குடி யினருக்கும் 1963 முதல் பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு அளிக்கப் பட்டு வந்தது. எனவே பதவி உயர்வில் இடஒதுக்கீடு தரக் கூடாது என்கிற தீர்ப்பை எதிர்த்துப் பட்டியல் குலத்தினர் போராட்டங்கள் நடத்தினர்.

இந்திரா காந்தி பிரதமரானது முதல் தலித்துகளும் பழங்குடியினரும் பெருமளவில் காங்கிரசுக் கட்சிக்கு வாக்களித்து வந்தனர். எனவே இவர்களின் வாக்கு வங்கியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அரசியல் நோக்கத்துடன் 1995இல் 77ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் பட்டியல் குலத்தினருக்கும் பழங்குடியினருக்கும் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளிப்பதற்கான பிரிவு 16(4A) சேர்க்கப்பட்டது. அதேபோல் பிரிவு 16(4)இன்படி நேரடியான பணியமர்த்தல், பிரிவு 16(4A)இன்படி பதவி உயர்வு அளித்தல் ஆகியவற்றில் ஏற்படும் பின்னடைவுப் பணி இடங்களில் (Backlog) இடஒதுக்கீடு அளிப்பதற்காக பிரிவு 16(4B) நிறைவேற்றப்பட்டது. அப்போது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் அதன் அரசியல் தலைவர்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு பெறத் தவறிவிட்டனர்.

பட்டியல் குலத்தினர், பழங்குடியினர் ஆகியோர்க்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கும் சட்டப் பிரிவுகள் 16(4A), 16(4B) ஆகியவற்றை எதிர்த்து எம். நாகராஜ்



பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று தில்லியில் தலித்துகள் நடத்திய ஆர்ப்பாட்டம்

என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். பணியில் நுழையும் போது மட்டுமே இடஒதுக்கீடு சலுகை தரலாம்; பதவி உயர்வு என்கிற இரண்டாம் நிலையில் இடஒதுக்கீடு வழங்கினால் நிர்வாகத்திறன் பாதிக்கப்படும் என்று வாதிடப்பட்டது. இந்த வழக்கு, தலைமை நீதிபதி ஒய்.கே. சபஹர்வால், நீதிபதிகள் கே.ஜி. பாலகிருட்டிணன், எஸ்.எச். கபாடியா, சி.கே. தாக்கூர், பி.கே. பாலசுப்பிரமணியன் ஆகியோரைக் கொண்ட அமர்வால் விசாரிக்கப்பட்டது. 2006இல் தீர்ப்பளிக்கப் பட்டது.

இத்தீர்ப்பில், ''பட்டியல் குலத்தவர், பழங்குடியினருக்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. அவ்வாறு பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று அரசுகள் கருதினால், குறிப்பிட்ட பிரிவினர் பின்தங்கிய நிலையில் தான் உள்ளனர் என்பதைத் திட்டவட்டமான சான்றுகளின் அடிப்படையில் உறுதி செய்ய வேண்டும்; அரசு வேலைகளில் போதிய பிரதிநிதித்துவம் பெறவில்லை என்கிற புள்ளி விவரங்கள் தரப்பட வேண்டும்; அரசமைப்புச் சட்டப் பிரிவு 335-இல் அறிவுறுத்தியுள்ளவாறு அவர்களின் பதவி உயர்வால் நிர்வாகத் திறன் பாதிக்கப்படாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்கிற மூன்று நிபந்தனைகளின் பேரில் பதவி உயர்வு அளிக்கலாம்'' என்று கூறப்பட்டது. இத்தீர்ப்பு அரசமைப்புச் சட்டப் பிரிவு 16(4A), 16(4B) ஆகிய வற்றின் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக இருந்தது.

2006இல் வழங்கப்பட்ட தீர்ப்பால் மாநில அரசுகளில் பட்டியல் குலத்தினருக்கும், பழங்குடியினருக்கும் பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளிப்பதில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. உயர்நீதிமன்றங்கள் வெவ்வேறுபட்ட தீர்ப்புகளை வழங்கின. உத்தரப்பிரதேசத்தில் மாயாவதி ஆட்சியில் பட்டியல் குலத்தினருக்கும் பழங்குடிகளுக்கும் பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. அலகாபாத் உயர்நீதிமன்றம் பதவி உயர்வில் அளிக்கப்பட்ட இடஒதுக்கீடு செல்லாது என்று தீர்ப்பளித்ததைச் சுட்டிக்காட்டி முன்பு வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் சமாஜ்வாதிக் கட்சியின் ஆட்சியில் இரத்துச் செய்யப்பட்டன. பஞ்சாப்-மும்பை உயர்நீதிமன்றங்கள் இதில் மாறுபட்ட தீர்ப்புகளை வழங்கின. தில்லி உயர்நீதிமன்றம் பதவி உயர்வில் இடஒதுக்கீடு செல்லாது என்று கூறியது.

எனவே இந்திய அரசும், மாநில அரசுகளும் மற்றவர்களும் 2006இல் வழங்கப்பட்ட தீர்ப்பை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பித்தனர், பல கட்டங்களைக் கடந்து 2017ஆம் ஆண்டில் இந்த விண்ணப்பங்கள் மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் நடந்தது. நடுவண் அரசின் சார்பில் வாதிட்ட தலைமை வழக்குரைஞர் கே.கே. வேணுகோபால், ''2006இல் அளிக்கப்பட்ட தீர்ப்பை ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்க வேண்டும்; இத்தீர்ப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் செயல் படுத்த முடியாதவை'' என்று கூறினார்.



2015இல் லக்னோவில் மேல்சாதியினர் இடஒதுக்கீட்டுக்கு எதிராக நடத்திய பேரணி

இந்த வழக்கைத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ரோஹின்டன் நாரிமன், குரியன் ஜோசப், எஸ்.கே.கவுல், இந்துமல்கோத்ரா ஆகியோரைக் கொண்ட அமர்வு விசாரித்தது. இந்த வழக்கின் தீர்ப்பை மற்ற நீதிபதிகளின் சார்பில் நீதிபதி ரோஹின்டன் நாரிமன் 26.9.2018 அன்று படித்தார். 58 பக்கங்கள் கொண்ட இத்தீர்ப்பில், "இந்த வழக்கை ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்ற வேண்டியதில்லை; 2006ஆம் ஆண்டில் நாகராஜ் வழக்கின் தீர்ப்பில் பட்டியல் குலத்தினருக்கும், பழங்குடியினருக்கும் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கும்போது அரசுகள் அவர்களின் பின்தங்கிய நிலையைப் புள்ளிவிவரங்களுடன் உறுதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை இனி பின்பற்ற வேண்டியதில்லை, ஏனெனில் 1992இல் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வின் இந்திரா சஹானி (மண்டல் வழக்கு) வழக்கின் தீர்ப்பில், பட்டியல் குலத்தினரும் பழங்குடியினரும் கல்வியிலும் சமுதாய நிலையிலும் பின்தங்கியவர்கள் என்பது அய்யத்திற்கு அப்பாற்பட்டது என்று தெளிவு படுத்தப்பட்டுவிட்டது" என்று கூறப்பட்டுள்ளது.

நீதிபதி நாரிமன் படித்த தீர்ப்பில், பட்டியல் குலத்தி னருக்கும் பழங்குடியினருக்கும் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு அளிக்கும் பிரிவுகள் 16(4A) மற்றும் 16(4B) ஆகியவை செல்லும் என்று கூறப்பட்டுள்ள போதிலும், இவர்களில் வளர்ந்த பிரிவினருக்குப் (Creamy Layer) பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளிக்கக்கூடாது என்கிற கேடான தீர்ப்பையும் வழங்கியுள்ளது. அரசுப் பணியில் நுழைகின்ற முதல் கட்டத்தில் வளர்ந்த பிரிவினர் என்கிற அளவுகோல் இல்லை என்றும், பதவி உயர்வில் இது கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் இத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

26.9.2018 அன்று வழங்கப்பட்ட 58 பக்கங்கள் கொண்ட தீர்ப்பில், இடஒதுக்கீட்டிலிருந்து வளர்ந்த பிரிவினரை ஏன் நீக்க வேண்டும் என்பதை நியாயப் படுத்த நீதிபதிகள் அதிக பக்கங்களை ஒதுக்கி வரிந்து கட்டிக் கொண்டு விளக்க முற்பட்டுள்ளனர்.

நாகராஜ் வழக்கில் 2006இல் வழங்கப்பட்ட தீர்ப்பில் பட்டியல் குலத்தினருக்கும் பழங்குடியினருக்கும் பதவி உயர்வில் வளர்ந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு அளிக்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டதை நீதிபதிகள் தம் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் 16.11.1992 அன்று மண்டல் வழக்கில் ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வு அளித்த தீர்ப்பில் - 5 தனித்தனியான தீர்ப்புகள் வழங்கப்பட்ட போதி லும்-எட்டு நீதிபதிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் வளர்ந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு அளிக்கக்கூடாது என்று கூறியுள்ளனர் என்பதை விரிவான மேற்கோள்களுடன் பக்கம் 19 முதல் 24 வரையில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

அதன்பின் இத்தீர்ப்பில், "இடஒதுக்கீட்டின் முதன் மையான குறிக்கோள் பின்தங்கிய வகுப்புக் குடிமக் களை இடஒதுக்கீட்டின் மூலம் முன்னேற்றச் செய்து, மற்ற குடிமக்களுடன் சரிநிகர் சமமாக நடக்கச் செய்வதே ஆகும். பின்தங்கிய வகுப்புக் குடிமக்களில் வளர்ந்த பிரிவினராக இருப்பவர்களே அரசு வேலைகளைத் தொடர்ந்து கைப்பற்றித் தமக்கு மட்டுமே உரியதாக்கிக் கொண்டால், பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள் இந்த வாய்ப்பைப் பெறமுடியாமல் போகிறது. அதனால் அவர்கள் பின்தங்கிய நிலையிலேயே நீடிக்க வேண்டி யிருக்கும், இந்த நீதிமன்றம் பட்டியல் குலத்தினருக் கும், பழங்குடியினருக்கும் பதவி உயர்வுக்கான இட ஒதுக்கீட்டில் வளர்ந்த பிரிவினர் கோட்பாட்டைப் பின் பற்ற வேண்டும் என்று கூறுவதால், அரசமைப்புச் சட்டம் பிரிவு 341 மற்றும் 342 ஆகியவற்றில் - குடியரசுத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியல்களில் - தலை யிடுவதாகாது. வளர்ந்த பிரிவினர் என்கிற நிலையை அடைந்துவிட்டவர்கள் அல்லது உட்சாதியினர் பின்தங்கிய நிலையிலிருந்து அல்லது தீண்டாமையிலிருந்து விடுபட்டு விட்டபோதிலும் பட்டியல் குலத்தினர் அல்லது பழங் குடியினர் பட்டியலில் நீடிப்பார்கள். எங்களுடைய நோக்கம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 14 மற்றும் 16 ஆகியவற்றின் படி சமத்துவமான வாய்ப்பை நிலைநாட்டுவதற்காக வளர்ந்த பிரிவினரை இடஒதுக்கீட்டிலிருந்து நீக்குவதே ஆகும்" என்று கூறப்பட்டுள்ளது. பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளிப்பதை மாநிலங்கள் தங்கள் விரும்புகின்ற அளவில் செயல்படுத்தலாம் என்கிற கேடான கருத்தும் இத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

**50 விழுக்காட்டுக்குமேல் இடஒதுக்கீடு அளிக்கக் கூடாது என்பதற்கும், இடஒதுக்கீட்டில் வளர்ந்த பிரிவினர் என்கிற கோட்பாட்டைக் கடைபிடிக்க வேண்டும் என்பதற்கும் அரசமைப்புச் சட்டத்தில் எந்தவொரு ஆதாரமும் இல்லை.**

மேல்சாதியினராக உள்ள நீதிபதிகள் தங்கள் வர்க்க நலனைக் காப்பதற்காக - பார்ப்பனர் உள்ளிட்ட மேல் சாதியினரின் முற்றுரிமையாக இருந்துவரும் அரசின் உயர் அதிகாரப் பதவிகளுக்குப் பிற்படுத்தப்பட்ட வகுப் பினர் போட்டியாளர்களாக வருவதைத் தடுக்கும் நோக் கத்துடன்தான் 16.11.1992 அன்று அளிக்கப்பட்ட மண்டல் வழக்கின் தீர்ப்பில் வளர்ந்த பிரிவினர் என்கிற கோட் பாட்டைத் திணித்தனர். இப்போது வளர்ந்த பிரிவினர் கோட்பாட்டைப் பட்டியல் குலத்தினர், பழங்குடியினரின் பதவி உயர்வில் புகுத்தியுள்ளனர்.

வளர்ந்த பிரிவினரை இடஒதுக்கீட்டிலிருந்து விலக்கிட வேண்டும் என்கிற கோட்பாட்டை உச்சநீதிமன்ற நீதிபதி சின்னப்ப ரெட்டி-கே.சி. வசந்தகுமார் வழக்கில் கேள்விக்கு உட்படுத்தினார். "ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களும் பதவிகளும் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் (மேல் சாதியினர்) வசதி படைத்தவர்களால் அபகரித்துக் கொள் ளப்படவில்லையா? ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களை யும் பதவிகளையும் சமுதாயத்தில் மேல் மட்டத்திலுள்ள வசதி படைத்தவர்கள் அபகரித்துக் கொள்வதைத் தவறு என்று சொல்லாத போது, பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் இடங்களையும் பதவி களையும் அபகரித்துக் கொள்வது மட்டும் எப்படித் தவறாகும்?" என்று நீதிபதி சின்னப்ப ரெட்டி வினவி னார். மேலும் "இடஒதுக்கீடு பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் மேல் தட்டினர் தகுதி-திறமைப் பற்றிப் பேசுகின்றனர். பொதுப் பிரிவில் பணியில் சேர்ந்ததா லேயே இடஒதுக்கீட்டின் கீழ் பணியில் சேர்ந்தவர்களை விட தாங்கள் திறமை யானவர்கள் என்று மேல்சாதி யினர் தவறாகக் கருதிக் கொள்கின்றனர்" என்று கருத்துரைத்தார்.

நடுவண் அரசின்கீழ் உள்ள உயர்கல்வி நிறுவனங் களில் இடஒதுக்கீட்டின்கீழ் சேருகின்ற தலித் மாணவர் களையும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களையும் இழிவாக நடத்துகின்றனர். அய்தராபாத் பல்கலைக்கழகத்தில் ரோகித் வெமுலாவின் தற்கொலையும், சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் மாணவர் தலைவர் கன்னைய குமார்கைது நடவடிக்கையும் மேல்சாதி மாணவர் களின் - மேல்சாதி அதிகார வர்க்கத்தின் சாதி ஆணவப் போக்கைக் காட்டுகின்றன.

1992இல் மண்டல் வழக்கின் தீர்ப்பில், பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு வளர்ந்த பிரிவினர் என்கின்ற அளவுகோலையும் பட்டியல் குலத்தினருக்கும் பழங்குடி யினருக்கும் பதவி உயர்வில் இடஒதுக்கீடு இல்லை என்ற நிலையையும் உண்டாக்கிய போது, பிற்படுத்தப் பட்டவர்களும் தலித்துகளும் பழங்குடியினரும் தங்களின் பொது எதிரி மேல்சாதி ஆதிக்க வகுப்பினரே என்பதை உணர்ந்து ஒன்றிணைந்து போராடத் தவறிவிட்டனர்; இதைத் தங்களின் தனிப்பிரச்சனையாக மட்டுமே பார்த்தனர்.

அதன் விளைவாக வளர்ந்த பிரிவினர் எனும் கோட்பாடு பட்டியல் வகுப்பினருக்கு இப்போது பதவி உயர்வில் புகுத்தப்பட்டுள்ளது. விரைவில் பணியில் சேரும் முதல் கட்டத்திலேயே இவர்களுக்கு இது விரிவு படுத்தப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. எனவே எந்த வொரு பிரிவினருக்கும் எந்த நிலையிலும் வளர்ந்த பிரிவினர் என்கிற கேடான அளவுகோல் கூடாது என்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், பட்டியல் குலத்தினரும், பழங்குடியினரும் ஓரணியில் திரண்டு போராட வேண்டும். "இன்னும் எவ்வளவு காலத்துக்கு இட ஒதுக்கீடு தருவது? இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்" என்று 2006இல் நாகராஜ் வழக்கின் தீர்ப்பில் நீதிபதிகள் கருத்துரைத்துள்ளனர். எனவே அடுத்தகட்ட மாக இடஒதுக்கீடு என்பதையே உச்சநீதி மன்றத்தின் துணையுடன் ஒழித்துக் கட்டுவதற்கான ஆபத்து இருப்பதை இடஒதுக்கீடு பெறும் மூன்று பிரிவினரும் உணர்ந்து, வருமுன் காப்பு நடவடிக்கை களை மேற் கொள்ள வேண்டும்.

**2008ஆம் ஆண்டில் வகுப்புவாரியான மக்கள் தொகையும், அரசுப் பணியில் அவர்கள் பெற்றுள்ள இடங்களும் (விழுக்காட்டில்)**

| | மேல் சாதியினர் | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | பட்டியல் குலத்தினர் மற்றும் பழங்குடியினர் |
|---|---|---|---|
| 1. மக்கள் தொகையில் | 17.5% | 57% | 25.5.% |
| 2. முதல்நிலைப் பணிகளில் | 77.2% | 5.4% | 17.4% |
| 3. 2ஆம் நிலைப் பணிகளில் | 75.4% | 4.0% | 20.6% |
| 4. 3, 5, 5ஆம் நிலைப் பணிகளில் | 68.1% | 7.1% | 24.8% |

இந்தியாவை ஆட்சி செய்கின்ற கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் நாட்டின் கொள்கைகளை வகுக்கின்ற - செயல்படுத்து கின்ற உயர் அதிகாரம் கொண்ட முதல் நிலை, இரண் டாம் நிலை பதவிகளில் இருப்பவர்கள் பல ஆண்டு களுக்கு அப்பதவியில் நீடிக்கின்றனர். அவர்களே நடப்பில் உண்மையான ஆளும் வர்க்க மாக இருக் கின்றனர்.

மேலே உள்ள பட்டியலில் மக்கள் தொகையில் 17.5 விழுக்காட்டினராக உள்ள மேல்சாதியினர் முதல் நிலை-இரண்டாம் நிலைப் பதவிகளில் 75 விழுக்

காட்டிற்குமேல் கைப்பற்றிக் கொண்டுள்ளனர். மக்கள் தொகையில் 57 விழுக்காடாக உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வெறும் 5.4 விழுக்காடு இடங்களை மட்டுமே பெற்றுள்ளனர். இதற்கு முதன்மையான காரணம் 1950 முதல் 1994 வரையில் இவர்களுக்கு வேலை யில் இடஒதுக்கீடு வழங்கப்படாததே ஆகும். மேலும் இவர்களின் மக்கள் தொகையின் விகிதாசாரத்திற்கும் மிகக் குறைவாக 27 விழுக்காடு இடஒதுக்கீடு செய்யப் பட்டிருப்பது மற்றொரு காரணமாகும். மேலும் வளர்ந்த பிரிவினர் என்கிற வகைப்பாடு இந்திய ஆட்சிப் பணி போன்ற உயர் பதவிகளில் நுழைவதற்குப் பெருந் தடையாக இருக்கிறது. எனவே மொத்த இடஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்குள் இருக்க வேண்டும் என்கிற சூழ்ச்சியை முறியடித்து, பிற்படுத்தப்பட்டவர்களின் விகிதாசாரப்படி 57 விழுக்காடு இடஒதுக்கீடு அளிப்ப துடன், வளர்ந்த பிரிவினர் என்கிற கோட்பாட்டையும் ஒழித்தால்தான் உயர் அதிகாரப் பதவிகளில் இவர்கள் படிப்படியாக நுழைய முடியும். அப்போதும் இவர்களின் விகிதாசார நிலையை எட்ட நீண்ட காலமாகும்.

பட்டியல் குலத்தினருக்கு அம்பேத்கர் இந்திய அமைச்சரவையில் அமைச்சராக இருந்த போது, 1943இல் முதன்முறையாக 8.33 விழுக்காடு வேலையில் இட ஒதுக்கீடு பெற்றுத்தந்தார். அது 1946இல் 12.5 விழுக் காடாக உயர்த்தப்பட்டது. பழங்குடியினருக்கு 1950இல் 5 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. 1970 முதல் பட்டியல் குலத்தினர் மக்கள் தொகையில் உள்ள விகிதா சாரப்படி 15 விழுக்காடும் பட்டியல் குலத்தினருக்கு 7.5 விழுக்காடும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

பட்டியல் குலத்தினருக்கு 1943ஆம் ஆண்டு முதற் கொண்டும், பழங்குடியினருக்கும் 1950 முதற்கொண்டும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருவதாலும் 1963 முதல் பதவி உயர்விலும் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டதாலும் முதல்நிலைப் பணிகளில் 17.4 விழுக்காடும், 2ஆம் நிலைப் பணிகளில் 20.6 விழுக்காடும், 3, 4, 5ஆம் நிலைப் பதவிகளில் 24.8 விழுக்காடும் பெற்றுள்ளனர். 1991இல் அம்பேத்கரின் நூற்றாண்டுக்குப் பின் தலித்து களிடம் மாபெரும் எழுச்சி ஏற்பட்டுள்ளது. எனவே இவர்களின் வளர்ச்சியை ஒடுக்குவதற்கான ஒருவழி யாகத்தான் 26.9.2018 அன்று உச்சநீதிமன்றத்தில் வழங்கப்பட்டத் தீர்ப்பில் பதவி உயர்வில் வளர்ந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு அளிக்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. இது நடைமுறைக்கு வந்தால் பட்டியல் குலத்தினரும், பழங்குடியினரும் உயர் அதிகாரப் பதவிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

* **மக்கள் தொகை விகிதாசாரப்படி பிற்படுத் தப்பட்ட வகுப்பினர், பட்டியல் குலத்தினர், பழங்குடியினர் ஆகியோர்க்கு வேலையிலும் உயர் கல்வியிலும் இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும்.**

* **வளர்ந்த பிரிவினர் என்கிற வகைப்பாடு எந்தப் பிரிவினருக்கும் பணியில் நுழைவு நிலையிலோ, பதவி உயர்விலோ இருத்தல் கூடாது,**

* **பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பதவி உயர்வில் இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும்.**

இக்கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக பிற்படுத் தப்பட்ட வகுப்பினரும், பட்டியல் குலத்தினரும், பழங் குடியினரும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். இந்த நிலையை அடையாவிட்டால் மேல்சாதி ஆதிக்க ஆளும் வர்க்கத்தினர் இடஒதுக்கீடு கோட்பாட்டையே படிப் படியாகச் சிதைத்து ஒழித்துவிடுவார்கள் என்பது உறுதி.

## பரிதி இளம்வழுதி மறைவு



11-11-1959இல் பிறந்த பரிதி இளம் வழுதி தன்னுடைய தந்தை இளம் பரிதியைப் போன்றே திராவிடர் இயக்கக் கொள்கைப் பற்றாளராக வளர்ந்தார். பரிதி இளம்வழுதி 25 வயதிலேயே சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். 1991-1996இல் இவர் தனி ஒருவராக ஜெயலலிதா ஆட்சி யில் சட்டமன்றத்தில் அவரை எதிர்த்துத் தீவிரமாகச் செயல்பட்டார்.

1996-2001 வரை சட்டப் பேரவைத் துணைத் தலை வராகவும், 2006 முதல் 2011 வரை செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராவும் பணியாற்றினார்.

2010இல் மா.பெ.பொ.க. வெளியிட்ட அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு நூல் வெளியீட்டுக்கு உதவி செய்தார்.

22.9.2018 அன்று ரெட்டேரியில் நடைபெற்ற பெரம்பூர் க. கந்தன் நினைவேந்தல் விழாவில் வே. ஆனைமுத்து அவர்கள் பரிதி இளம்வழுதியிடம் உடல்நலன் உசாவினார். அப்பொழுதே மிகவும் மெலிந்து காணப்பட்டார். தனியாக நடந்துவர இயலாத நிலையில் இருந்தார். சர்க்கரை நோய் தாக்கம் அதன் உச்சகட்டமாக இதய நோய் தாக்குதலால் 13.10.2018 அன்று அடையாறில் 58ஆவது வயதி லேயே இயற்கை எய்தினார்.

பரிதி இளம்வழுதியை இழந்து துயருறும் அவரு டைய குடும்பத்தினருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கட்டுரைத் தொடர்-63

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

## மீண்டும் அறப்போர்

**சு**யமரியாதை இயக்கத்தின் பேராலும், நீதிக் கட்சியின் பேராலும், திராவிடக் கழகத்தின் பேராலும் பலமுறை, பல இடங்களில் மாநாடு கூடியிருந்தாலும், அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் உயர்ந்ததாகவும், திராவிட மக்கள் பெருமைப்படக் கூடியதாகவும் இருந்தாலும், ஈரோட்டில் இந்த மாதம் 23-24ஆம் நாள்களில் கூடிய 19ஆவது திராவிடக் கழகத் தனி மாகாண மாநாடு, எல்லாவற்றைக் காட்டிலும், நாட்டு வரலாற்றில் எவரானாலும் முக்கியமாகக் குறிப்பிட்டே ஆகவேண்டிய முக்கியத்துவத்தைப் பெற்று, உண்மையிலேயே தனிமாநாடு என்றே யாவரும் சொல்லத்தக்க விதமாய்ப் பெருஞ் சிறப்போடு நடந்து முடிந்திருக்கிறது.

இந்தத் தனிமாநாடு, மிக மிக அவசரமாய், விரைவில் நடத்தியாக வேண்டும் என்ற முடிவோடு விரைவாக அறிவித்து, விரைவாகவே ஒவ்வொரு காரியங்களும் செய்யப்பட்டது என்றாலும், மாநாட்டு நிர்வாகிகளுக்கு மழை ஒரு பெருந்தொல்லையையும் கஷ்டத்தையும் கொடுத்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். மாநாடு தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் தொடங்கிய மழை, பெருமழையாகி, எந்த அளவுக்கு கஷ்டத்தைக் கொடுத்திருக்க வேண்டும் என்பதை மற்றவர்களுக்கும் அறிவிப்பதைப் போல, 23ஆம் நாள் மாலையிலும் மழைபெய்து நின்றுவிட்டது.

இந்தத் தனி மாநாட்டின் அவசியத்தையுணர்ந்து, இதைக்கூட்ட எண்ணிய பெரியாரவர்கள், மழையை ஒருபுறம் எதிர்பார்த்தார்கள் என்றாலும் 50,000, 60,000 என்று சொல்லத்தக்க விதத்தில் பெருங்கூட்டத்தை எதிர்பார்க்கவேயில்லை, அய்ந்தாறு மாதங்களுக்கு முன்னால் நடந்திருக்கும் தூத்துக்குடி மாநாட்டையும், இயக்கத் தோழர்களின் இயற்கையான வறுமையையும் எண்ணி, 5000 அல்லது 10000க்கு மேற்பட முடியாதென்றே அவர்கள் எதிர்பார்த்தார்கள்,

இப்படியாக மழை ஒரு பக்கம் தொல்லை கொடுத்து, எதிர்பார்க்காத நிலையில் வந்துகூடிய தோழர்கள் பெருகிவிடவே, வந்திருந்த இயக்கத் தோழர்கள், முக்கியமாக உணவுக்குச் சிரமப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதென்றாலும், பெரியார் அவர்களின் பேருரைக் குப்பின், அவர்கள் குறைகளை மறந்துவிட்டார்கள் என்றே குறிப்பிடலாம்.



நாள்தோறும் உழைத்தே வாழ வேண்டிய பட்டாளித் தோழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட திராவிடக்கழக மாநாட்டிற்கு-மாநாட்டு நிர்வாகிகள் மழையின் தொல்லையை அறிவித்து, வருகையைக் குறைத்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருந்தும் - பொருள் நஷ்டத்தை எண்ணாமல் - உடல் கஷ்டத்தைக் கருதாமல் 50000க்கு மேற்பட்ட இளங்காளைகளும் 10000க்கு மேற்பட்ட தாய்மார்களும் வந்து கூடினார்கள் என்றால் இதற்கு அர்த்தமென்ன? இதனை வெறும் உணர்ச்சி வேகம் என்றுதான் எப்படி எண்ண முடியும்?

நிறுத்தப்பட்ட போராட்டத்துக்கிடையே, அதாவது இயக்கம் போர்க்களப் பாதையில் பலிபாகு படலத்தில் திருப்பப்பட்டிருக்கும் வேளையில், “இதுதான் நாம் ஒருவருக்கொருவர் பயணம் சொல்லிக் கொள்ளும் மாநாடு” என்ற படைத் தலைவரின் அறிவிப்பைக் கேட்டு விட்டும், இளமையும் ஆர்வமும் நிரம்பிய இளைஞர்களின் பெருங்கூட்டம் வந்து கூடியதென்றால், அதுவும் படைத்தலைவர் எதிர்பார்க்காத முறையில் மாபெருங்கூட்டமாய்க் கூடியதென்றால், உண்மை நிலைமையையுணர்ந்து, செயலாற்றும் தீரமிக்கவர்களாய், வாழ்வு அல்லது சாவு என்ற முடிவுக்கு வந்தவர்களாகவே கூடினார்கள் என்பது நிச்சயம்,

இப்பேர்ப்பட்ட உணர்ச்சியும், உத்வேகமும் நிரம்பிய இந்த மாநாட்டில், செய்யப்பட்ட முடிவுகள் ஒவ்வொன்றும், செயலுக்கு வரவேண்டும் என்கிற தீர்மானங்கள் ஒவ்வொன்றும், இந்த அடிப்படையிலேயே நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை,

ஹைதராபாத் நெருக்கடியின் பேரினால் ஓமந்தூராருக்குப் பெரியாரவர்கள் அளித்த வாக்குறுதியின் காரணமாக, நம் அறப்போர் நாள் குறிப்பிடாமல் நிறுத்தப்பட்டது. அந்த நெருக்கடி தீர்ந்தவுடனே அதாவது மறு வாரத்திலேயே அறப்போர்என்கிற நிலையுண்டாகி விட்டது. அமைதியான முறையில் அறப்போர் நிகழ்த்துவதற்குரிய பக்குவம் ஏற்பட்டுவிட்டாலும், பள்ளிகளுக்கு விடப்பட்ட “தசரா” விடுமுறை குறுக்கே நின்று தடைப்

படுத்தியதால், "மீண்டும் அறப்போர் எப்போது?" என்கிற கேள்வியே எங்கு பார்த்தாலும் இருந்து வந்தது.

இந்தக் கேள்விக்கு தனி மாநாடு அளித்த பதில் இது தான்.

"ஹைதராபாத் போராட்டத்தின் காரணமாக, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தி எதிர்ப்பு மறியலை மீண்டும் நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் துவக்கி நடத்த வேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கிறது."

மாநாட்டின் மூன்றாவது தீர்மானமான இந்தப் பதில் பிரதமர் ஓமந்தூராருக்குப் பிடிக்காததாயிருக் கலாம். அமைச்சர் அவினாசியாருக்கு, ஆக்ரோஷத்தை உண்டாக்கலாம். ஆனால் என்ன செய்வது? பார்ப்பன ஆப்பு இருக்கிறது என்கிற நம்பிக்கையால் "வாலாட்டம்" காட்டிய மந்திரிகள், ஆப்பு நழுவிய பிறகு அவஸ் தைப்பட்டுத்தானே தீரவேண்டும். இந்த இருவருக்கும் மாநாட்டின் 6ஆவது தீர்மானம் மேலும் கசப்பை யுண்டு பண்ணலாம்.

"இந்தி நுழைவால் இந்நாட்டுக்கலையும், பண்பும், நாகரீகமும் கெடுவதோடு சிறு குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கே இம்முறைகேடு பயக்கும் என்று மிக மிக வணக்கமாகக் கூறப்பட்டிருந்தும், பிடிவாதமாக இந்தி நுழைப்பை வற்புறுத்திக் கொண்டிருக்கும் ஓமந்தூர் மந்திரி சபையை நாம் வெறுக்கிறோமென்பதற்கு அறி குறியாக, பிரதமரும், கல்வி மந்திரியும் வெளியூர்களில் சுற்றுப்பிரயாணம் செய்யும் காலத்தில் கருப்புக்கொடி காட்டிப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று இம்மாநாடு பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறது."

இந்த ஆறாவது தீர்மானம். மாநாட்டில் எழுந்த ஒரு எதிர்ப்பை அடக்கி நிறைவேற்றப்பட்டதாகும். தீர்மானம் கூடாது என்கிற எதிர்ப்பு அல்ல! "மந்திரிகளிலே இருவருக்கு மட்டும்தானா கருப்புக்கொடி? ஏன் எல்லோருக்குமே கருப்புக்கொடி காட்டக் கூடாது? தீர்மானத்தைத் திருத் துங்கள்! எல்லோருக்கும் கருப்புக்கொடி என்று செய் யுங்கள்!" இவைதான் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் கூறியது. இருப்பினும், இந்த விவாதங்களுக்குப் பெரியார் அவர்கள் பதில் கூறியபின், எந்தவிதமான திருத்தமு மில்லாமல் அசல் தீர்மானமாகவே இது நிறைவேறி விட்டது.

மந்திரிகளைப் பகிஷ்கரிக்கும் போக்கில், இந்த மாநாட்டில் செய்யப்பட்ட சிறு மாறுதலை, இயக்கத் தோழர்கள், பொதுமக்கள் ஆகியோரைக் காட்டிலும் மந்திரிகள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் யாராக இருந்தாலும், அவர்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும், அவைகளை எதிர்ப்பது தான் திராவிடக் கழகத்தின் போக்கு என்பதாகக் கொஞ்சமும் நாணயமோ, யோக்கியதையோ இல்லாத முறையில், பொறுப்புள்ள காங்கிரஸ் மந்திரிகள் ஒவ் வொருவருமே சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அறப்போர் தொடங்கிய பிறகு அதுவும் ஆங்காங்கே கழகத்தின் வேண்டுகோளின்படி பொது மக்கள் மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி காட்ட ஆரம்பித்த பிறகு ஒவ்வொரு மந்திரிகளும் மிரண்டுபோய், இன்னது தான் பேசுகிறோம் என்கிற நிதானமின்றி, தங்களின் இலாக்கா என்ன? தாங்கள் மக்களிடம் விளக்க வேண்டியது எவ்விஷயம்? என்பதான கவலை கொஞ்சமுமில்லாமல் இந்தி எதிர்ப்பைப் பற்றி ஒரு முகாரிபாட வேண்டு மென்பதிலேயே கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். அதுவும் கட்டுப்பாடாக, காங்கிரஸ் மேலிடத்தின் கட்டளைப்படி செய்து வந்திருக்கிறார்கள்.

எல்லா மந்திரிகளுக்கும் இந்தியைப் பற்றிப் பேச வேண்டிய அவசியத்தையுண்டு பண்ணியிருக்கிறோம் என்பதினால் நாம் ஒரு பக்கம் பெருமையடைந்தாலும், நாட்டின் வெவ்வேறு பிரச்சனைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலிருக்கும் அவர்கள், கூலிக்கு மாரடித்து அழுதாலும், பொதுமக்கள் முன் தங்கள் கடமைகளை மறைத்து விடுகிறார்களே, அதாவது தேவையான பிரச்சனைகளைப் பேச வேண்டிய நேரத்தில் ஏமாற்றிவிட்டுச் சென்று விடுகிறார்களே என்பதை எண்ணும் போது நம்மில் யாரும் வருந்தாமலிருக்க முடியாது.

மேலும், நமது மந்திரிகளின் 'கோயபெல்ஸ்' பொய்ப் பிரச்சாரத்தை-விஷம வேலையை வெட்டவெளிச்சமாக்க வேண்டிய பொறுப்பும் நம் மீது விழுந்திருக்கிறது. காங்கிரசின் ஆலயப் பிரவேசத் திட்டத்திற்கு, அதற்கு முன்னாலிருந்தே நாம் வளர்த்துப் பெருக்கி வந்த ஆதரவையும், சட்டமான நேரத்தில் தளராமல் காட்டி வந்த ஆதரவையும் யாரும் மறந்துவிட முடியாது. அதுபோலவே ஜமீன் ஒழிப்பு இனாம் ஒழிப்பு மசோதா ஏட்டளவில் அவர்கள் கொண்டுவந்த நேரத்தில், "அவர்கள் கொண்டு வந்தார்களே" என்ற அசூயை இல்லாமல், நாம் அதை ஆதரிக்கச் சிறிதும் பின்வாங்க வில்லை என்பதையும், நெடுஞ்காலத்திற்கு முன்னா லிருந்தே நாம் அதைத் திட்டமாகக் கொண்டிருக்கிறோ மென்பதையும் அவர்கள் அறிவார்கள். அப்படிப் பல ருடைய ஆதரவிருந்தும், நிறைவேற்ற வேண்டிய அவசியமிருந்தும், வடவர்களின் மிரட்டலுக்கும், பார்ப் பனர்களின் சூழ்ச்சிக்கும் பயந்து போய், இனாம்களை விட்டுவிட்டோம் என்பதையும் அவர்கள் உணர்வார்கள். மேலும் மாகாண முழுவதும் மதுவிலக்குத் திட்டம் என்ற போது நாம் அதைப் பாராட்டாமல், வரவேற் காமல், ஆதரிக்காமல் இல்லை. ஆனால் மதிமிக்க நிர்வாகத் திறமை காட்டப்படுவதில்லையே என்றுதான்

நாம் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். இப்படியாக மக்களுக்கு நன்மையைக் கொடுக்கக்கூடிய எந்தத் திட்டத்தையும் நாம் வரவேற்றும், ஆதரித்தும் வந்திருக் கிறோம். அதே நேரத்தில் அவர்களின் பிற்போக்கான - இலாபப் பங்கு கோரும் திட்டங்களை - அடிமை முதிர்ச் சியில் ஆக்கிய திட்டங்களை - அடியோடு ஒழிய வேண்டு மென்று சொல்லவும் தவறவில்லை. இப்படி நாம் சொல்லுகிற நேரத்தில்தான் அதை மறுக்கத் திறனற்ற இவர்கள், காங்கிரஸ் விரோதிகள், அரசியல் விரோதிகள், கருஞ்சட்டையினர் என்பது போலச் சம்பந்தா சம்பந்த மில்லாமல் மக்கள் முன் பித்தலாட்டமாகப் பேசிக் கொண்டு வருகிறார்கள். இப்போதைய நிலையில் மக்கள் அவர்களுக்குக் காட்டுகிற, கருப்புக்கொடி இதற்கு ஒரு காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இன்னும் சொல்லப் போனால், இந்தி மந்திரிகளான கல்வி மந்திரி, பிரதமர் ஆகிய இருவர்தான், இந்தப் பேடித்தனமான கட்டாய இந்தி நுழைப்புக்குக் காரணஸ் தர்களாயிருக்கிறார்கள் என்று, அவ்விருவரை மட்டுமே இந்தக் காரியத்தை முன்னிட்டு பகிஷ்கரிக்கின்றார்கள் என்பதை மற்றவர்களும் நன்றாய் உணர்ந்துகொள்ள, பகிஷ்கரிக்கும் திட்டத்தில் இந்த மாநாடு செய்திருக்கும் மாற்றம், நல்லதொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

இந்த மாறுதலினால் - அதாவது பகிஷ்கரிக்கும் முறையில் ஒரு குறுகிய எல்லையை வகுத்துவிட்ட தினால், இந்தி மந்திரிகள் திக்குமுக்காடக் கூடிய வகை யில், அவர்கள் எங்கெங்கு சென்றாலும் அங்கெல்லாம் பகிஷ்காரம் வெற்றியோடு நடக்கும் என்று எண்ணுவ தால், இந்த மாறுதலை நாம் வரவேற்கிறோம்.

இந்த மாநாடு, அறப்போருக்கு வேறு பல முனை களையும் திறந்துவிட்டிருக்கிறது. திறந்து விட்டிருக்கிறது என்று சொல்லுவதைக் காட்டிலும், திறந்து விடும்படி யான அவசியத்தை ராமராஜ்ய சர்க்கார் உண்டாக்கி விட்டது என்று சொல்வதே பொருத்தமாகும்.

**ஆச்சாரி சர்க்கார், அட்வைசரி சர்க்கார், வைதீக நீதிக்கட்சி சர்க்கார் ஆகிய இத்தனை சர்க்காருக்கும் முன்னாலேயேயிருந்து நடிக்கப் பட்டு வந்த இரணியன் நாடகத்திற்கு, இந்த ஓமந்தூர் சர்க்காரில் தடை. பல வருஷங்களாய் நடிக்கப்பட்டு வந்த போர்வாள் நாடகத்திற்கு இப்போது தடை. இராவண காவியம் என்ற ஒப்பற்ற பெருநூலுக்கு, இந்த ராமராஜ்ய சர்க்காரில் தடை!** இதைக்காணுகிற போதுதான், இவர்கள் சொந்தப் புத்தியோடு இவைகளுக்குத் தடை விதிக்கவில்லை; பார்ப்பனர்களின் சொற்புத்தி கேட்டுத் தடைவிதித்திருக் கிறார்கள் என்று நாம் வற்புறுத்திச் சொல்லி வர வேண்டி யிருக்கிறது. ஏன் அப்படிக் கூறுகிறோமென்றால், இப்போ தைய மந்திரிகளில் யாருமே இராவண காவியம் முழுவதையும் படித்திருக்க முடியாது என்பதையும், அப்படி ஒரு வேளை அதற்காக ஒரு மாதம், 2 மாதம் செலவழித்து ஒரு சிலர் படிக்க முயன்றிருந்தாலும், அவர்களுக்கு அர்த்தம் விளங்காத பகுதிகள் அநேகமுண் டென்பதையும் நாம் நிச்சயமாகக் கூறுவோம். தமக்கு விளங்கா ஒன்றுக்கு, புரியாத ஒன்றுக்குத் தடைவிதிக்கத் துணிந்தார்கள் என்றால், அது சொந்தப் புத்தியோடு செய்த காரியமா? சொற்புத்தியால் செய்த காரியமா?

சர்க்காரின் இந்த நடத்தையைக் கண்டித்து, மாநாடு சர்க்காருக்கு எச்சரிக்கை செய்திருக்கிறது.

“11. (அ) மேற்கண்ட (போர்வாள், இரணியன்) நாடகங்களின் பேரிலும், இலக்கியத்தின் பேரிலுமுள்ள தடையை உடனடியாகச் சென்னை அரசாங்கம் நீக்கா விடில், தடை நீக்குவதற்கான நேரடி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தமான நிலைமை திராவிடர் கழகத்திற்கு ஏற்படுமென்று இம்மாநாடு அரசாங்கத் தாருக்கு எச்சரிக்கை விடுக்கின்றது.”

இந்த எச்சரிக்கையைத்தான் அறப்போரில் மற்றொரு போர்முனை என்று நாம் குறிப்பிடுகிறோம். எச்சரிக் கையைக் கேட்டு, இந்தச் சர்க்கார் நல்ல போக்கைக் கைக்கொள்ளாது என்பதும், கைக்கொள்ளக் கூடிய நிலையில் அதற்குச் சுயமான போக்கு இல்லை என் பதையும் மாநாட்டுப் பிரதிநிதிகள் அறிவார்கள். அறிந் திருந்தும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள் என்றால், அதனுடைய பின்விளைவு எப்படியிருக்கும் என்பதை அவர்கள் சிந்திக்கவில்லை என்று கூறிவிட முடியாது. இன்று ஒரு திருவத்திபுரத்திலே நாடகமும், ஒரு கடலூ ரிலே ஒத்திகையும் என்ற நிலை இருக்கிறதே, அது எத்தனை திருவத்திபுரங்களாக, எத்தனை கடலூர் களாக ஆகவேண்டும் என்கிற கேள்விதான் இந்த எச்சரிக்கை! நாளை வீதிகள் தோறும் இராவண காவி யங்கள்-அதனுடைய சில ஏடுகள் விலை கூவி விற்கப் பட்டால், விளையப்போவது என்ன என்கிற கேள்விதான் இந்த எச்சரிக்கை! இந்த எச்சரிக்கையால், பின் எடுக் கப்படும் நேரடி நடவடிக்கைகள் எப்படி எப்படியெல்லாம் இருக்கும் என்பதை இப்போது நாம் விளக்கத் தேவை யில்லை.

மற்றொரு போர்முனைதான், வடநாட்டான் மறியல், புராண சினிமா மறியல். இந்த மறியலுக்கான திட்டங் களை வகுத்துக் கொடுக்குமாறு, தலைவர் பெரியார வர்களை மாநாட்டுப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டிருக் கிறார்கள். இது 4ஆவது தீர்மானமாக மாநாட்டில் நிறை வேற்றப்பட்டிருக்கிறது.

வடநாட்டான் மறியலைக் குறித்து நாம் சென்ற வாரம்கூடக் குறிப்பிட்டிருந்தோம். புராண சினிமா மறியலின் அவசியத்தைப் பற்றியும் நாம் விளக்கி வந்திருக்கி றோம். ஆகவே அவைகளைப் பற்றி இங்கு குறிப்பிடாமல் தலைவர் பெரியாரவர்களை, மாநாட்டுப் பிரதிநிதிகள் வேண்டிக் கொண்டிருப்பதைப் போல, நாமும் வேண்டிக் கொள்ளுகிறோம், இதற்கான திட்டங்களை விரைவில் அளியுங்கள் என்று.

ஆக, வேறு 2, 3 போர்முனைகளுக்குப் போக வேண்டிய அவசியத்தை - வீரத்தோடு போராடியாக வேண்டிய முக்கியத்துவத்தை-சர்க்கார் நமக்குக் கொடுத் திருக்கிறார்கள் என்பதும், அவற்றை நாம் உணர்ந்திருக் கிறோம் என்பதை சர்க்காருக்கும் மக்களுக்கும் அறிவிக் கவும், உருவான திட்டங்களை வகுக்கவும் இந்தத் தனி மாநாடு காரியங்களை ஆற்றி, பெரியாரவர்கள் குறிப்பிட்டது போல், ''ஒருவர்க்கொருவர் பயணஞ் சொல்லிக் கொள்ளும் மாநாடாகவே'' இந்த மாநாடு ஆகியிருக்கிறது.

நவம்பர் 1-ஆம் தேதி மீண்டும் அறப்போர் என்று மாநாட்டுப் பிரதிநிதிகள் முடிவுகட்டியிருந்தாலும், அந்த நாளில், மதமில்லாத நமது சர்க்காரை ''கிரகணம் பிடித்துக் கொண்டுவிட்டது; அதனால் பள்ளிகளுக்கு விடுமுறை'' என்று கூறப்படுவதால் 2ஆம் தேதி முதல் மீண்டும் அறப்போர் என்கிற அறிவிப்பைப் படைத் தலைவர் பெரியாரவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆதலால், நவம்பர் 2ஆம் தேதி முதல் சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூலின் முன் மீண்டும் மறியல் தொடங்கிவிடும். அன்று முதலே இந்தி மந்திரிகள் பகீஷ்காரமும் ஆங்காங்கே நடந்துகொண்டிருக்கும். பிறகு படிப்படியாக, மாநாடு நிறைவேற்றிய ஒவ்வொரு திட்டங்களும், ஒன்றன்பின் ஒன்றாகத் தன் இறுதி இலட்சியம் நிறைவேறும் வரை தொடர்ந்து நடைபெறும்.

வாழ்வு அல்லது சாவு என்ற நிலையில் துணிந்து, போர்க்களத்தில் இறங்கிய போர் மறவர்களைப் பாராட்டு கிறோம். இழிவை மறக்கும் அடிமை மோகத்தை, இந்த நாட்டிலிருந்து துரத்த இப்பொழுது காலம் நெருங்கி விட்டது என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம். இப்போது சர்க்கார் என்ன செய்யப் போகிறது? மீண்டும் அறப் போரே நடக்கட்டும் என்றால் நமக்குத்தான் என்ன தடை? ஆம்! மீண்டும் அறப்போர்! அது நவம்பர் 2.

**(குடிஅரசு, 30-10-1948)**

**முற்றும்**

**குறிப்பு :** இந்தத் தொடர் கட்டுரை இத்தோடு நிறைவ டைகிறது. இதன் இரண்டாம் பகுதி தனி நூலாக வெளி வரும்.

**- கட்டுரை ஆசிரியர்**

## புதுச்சேரியில் கி.த.பச்சையப்பன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி



இலக்கியப் பொழில் இலக்கிய மன்றமும் இலக்கணச் சுடர் இரா.திருமுருகனார் நினைவு அறக்கட்டளையும் இணைந்து நடத்திய மொழிப்போர் மறவர். மொழி நடை ஆசிரியர் புதுச்சேரி விடுதலைப் போராட்ட வீரர் புலவர். கி.த.பச்சையப்பனார் நினைவுவேந்தல் நிகழ்வு புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திருமுருகனார் அறக்கட்டளை செயற் குழு உறுப்பினர் புலவர் செ.இராமலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். இலக்கியப் பொழில் இலக்கியமன்ற நிறுவுநர், எழுச்சித் தமிழ்மாமணி பெ.பராங்குசம் தலைமை உரை ஆற்றினார். தமிழ்மாமாணி புலவர் பூங்கொடி பராங்குசம் முன்னிலை உரை ஆற்றினார்.

விழுப்புரம் ஆசிரியர் மாமணி தெ.வே.சஞ்சீவிராயன் கி.த.ப. படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றி னார். அன்னை அருள் மறுதோன்றி அச்சக நிறுவுநர் இரா.கோவிந்தசாமி, புலவர். கி.த.ப. நினைவு மலரை வெளியிட்டார்.

கடலூர் தமிழ்ச்சங்கத் தலைவர் பேரா.இராச. குழந்தை வேலனார், சொல்லாய்வறிஞர் அருளி, புலவர். திருநாவலன், இலக்கியன், சடகோபன், சொக்கலிங்கம் ஆகியோர் நினைவேந்தல் உரை ஆற்றினார்கள். நிகழ்ச்சியில் அரங்க, விசயரங்கம் தொகுப்பும் நன்றியும் கூறினார். நிகழ்ச்சியில் ஏராளமான தமிழன்பர்கள் கலந்து கொண்டனர்.

## சோ.க.அறிவுடைநம்பி மறைந்தார்



நீண்டகால தென்மொழி அன்பரும், தென்மொழி தமிழ்நிலம், தழல் ஆகிய இதழ்களில் தமிழின மேம்பாட்டுக் கருத்து களை எழுதியவரும், சிந்தனையாளன் வாழ்நாள் உறுப்பினரும் உலகத் தமிழ்க் கழக திருப்பூர் மாவட்டச் செயலாளருமான சோ.க.அறிவுடைநம்பி அவர்கள் 2.10.2018 அன்று மறைவுற்றார் என்பதை வருத்தத் துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரை இழந்து துயரும் அவரது குடும்பத்தாருக்கு மா.பெ.பொ.க. சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வறுமை ஒழிக்கப்படுமா?

உலகில் 100 கோடி மக்கள் 2000-ஆம் ஆண்டுக்குப் பிறகு வறுமையின் கோரப் பிடியில் இருந்து விடு பட்டுள்ளனர் என்று, அண்மையில் 'பில்மிலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை' வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனையில் இந்தியா வும் சீனாவும் பெரும் பங்கு வகித்துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

சீனாவின் மக்கள் தொகை சுமார் 141.5 கோடி. இந்தியாவின் மக்கள் தொகை சுமார் 135.4 கோடி. உலக மக்கள் தொகையான 760 கோடியில் இந்த இரு நாடுகளின் மக்கள் தொகை மட்டுமே 36.2 சதவீதம். எனவே, இந்த இரு நாடுகளின் பங்களிப்பு இல்லாமல் இத்தகைய சாதனை நிகழ்த்தப்பட முடியாது.

வறுமை ஒழிப்பில், சுகாதாரமும் கல்வியும் முக்கியப் பங்கு வகிப்பதை அந்த அறிக்கை தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது. மனித மூலதனத்துக்காக, சுகாதாரம் மற்றும் கல்விக்கு அரசுகள் போதிய நிதி ஒதுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி உள்ளது. மக்களின் திறமை, அறிவு, சுகாதார அளவீடு இவற்றின் கூட்டுத் தொகையையே மனித மூலதனம் என்று பொருளா தார வல்லுநர்கள் வரையறுக்கின்றனர்.

கல்வி மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் வறுமையை ஒழித்த இந்தியாவை, சகாரா பாலை வனத்துக்குத் தெற்கே உள்ள ஆப்பிரிக்க நாடுகள் பின்பற்ற வேண்டும் என்றும் அந்த அறிக்கை அறிவுறுத்தி உள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக மகிழ்ச்சி அடைவதை விட, சுகாதாரத்தையும் கல்வியையும் மேம்படுத்தும் முனைப்பு, அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி, எதிர்பார்த்த பலனுக்கும், கிடைத்த பலனுக்கும் உள்ள இடைவெளி ஆகியவை குறித்து சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டிய நேரம் இது. குறிப்பாக, செலவழிக்கப்பட்ட தொகைக்கு ஏற்ப பலன் கிடைக்காதது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தியாவில் சுகாதாரத்துக்கு மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 1.3 சதவீதம் தான் செலவழிக்கின்றன. ஆனால், சர்வதேச நாடுகள் சராசரியாக 6 சதவீதம் ஒதுக்கு கின்றன. சுகாதாரத்துக்கு 2025-க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும் என 2017-இல் வெளியிடப்பட்ட தேசிய சுகாதாரக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சராசரியை நெருங்குவதற்கு நம்மிடம் எந்தத் திட்டமும் இல்லை என்பதையே இது வெளிச்ச மிட்டுக் காட்டுகிறது. டாக்டர் கே. ஸ்ரீநாத் ரெட்டி தலை மையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தது மூன்று சதவீத மாவது சுகாதாரத்துக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று 2011-இல் பரிந்துரைத்தது குறிப்பிடத்தக்கது.

சுகாதாரத்துக்காக அரசு மிகக் குறைந்த அளவே நிதி ஒதுக்கும் நிலையில், 70 சதவீதம் பேர் தங்கள் உடல் நலத்தைக் காக்க, தாங்களே செலவழிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன் விளைவாக ஒவ்வோர் ஆண்டும் ஏழு சதவீதம் பேர் வறுமைக்கோட்டுக்குள் தள்ளப்படுகிறார்கள்.

தேசிய மாதிரி ஆய்வுகளின் அறிக்கை சில அதிர்ச்சி கரமான தகவல்களைத் தெரிவிக்கிறது. ஊரகப் பகுதி களில் 72 சதவீதம் பேரும், நகரப் பகுதிகளில் 79 சதவீதம் பேரும் தனியார் மருத்துவமனைகளில் தான் சிகிச்சை மேற்கொள்கின்றனர். ஊரகப் பகுதிகளில் 58 சதவீதம் பேரும், நகரப் பகுதிகளில் 68 சதவீதம் பேரும் உள்நோயாளிகளாக தனியார் மருத்துவமனைகளிலேயே சிகிச்சை எடுத்துக் கொள்கின்றனர். பல்வேறு மருத்துவ நலத் திட்டங்களை அரசுகள் செயல்படுத்தினாலும் ஊரகப் பகுதிகளில் 86 சதவீதம் பேரும், நகரப் பகுதிகளில் 82 சதவீதம் பேரும் இதுபோன்ற எந்தத் திட்டத்திலும் இடம்பெறவில்லை. ஊரகப் பகுதிகளில் 20 சதவீதம் குழந்தைகளும், நகரப் பகுதிகளில் 11 சதவீதம் குழந் தைகளும் மருத்துவமனைகளில் பிறப்பதில்லை என்பது கவலை அளிக்கும் தகவலாகும்.

மொத்த மக்கள் தொகையில், ஊரகப் பகுதிகளில் 7.7 சதவீதம் பேரும் நகரப் பகுதிகளில் 8.1 சதவீதம் பேரும் முதியோர் ஆவர். இவர்களில் ஊரகப் பகுதி களில் 82 சதவீதம் பேரும், நகரப் பகுதிகளில் 80 சதவீதம் பேரும் பொருளாதார ரீதியாகத் தங்கள் வாரிசுகளைச் சார்ந்துள்ளனர். இயற்கையாகவே, தங்கள் பெற்றோரின் மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள முடியாமல், குறைந்த வருவாய்ப் பிரிவினர் தவிர்த்து வருகின்றனர். நோயின் தீவிரத்தைக் காட்டிலும் நோயாளிகளின் செலவழிக்கக் கூடிய திறன் மீதே இரக்கமற்ற மருத்துவமனைகளின் கவனம் உள்ளது. பணக்காரர்களும் காப்பீடு செய்தவர்களும் மட்டுமே அங்கு முக்கியத்துவம் பெறுகிறார்கள். ஏழைகளுக்கும் காப்பீடு செய்யாதவர்களுக்கும் தரமான சிகிச்சை எட்டாக் கனியாகவே உள்ளது.

பெரிய மருத்துவமனைகள், மருந்து நிறுவனங்கள், மருத்துவர்களுக்கு இடையிலான கூட்டு, ஒவ்வோர் ஆண்டும் பல இலட்சம் இந்தியர்களை வறுமைக்

கோட்டுக்குக் கீழ் தள்ளுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 3.5 கோடிப் பேர் மருத்துவச் செலவுகளினால் கடன் சுமைக்கு ஆளாகின்றனர்.

நாடு முழுவதும் சுமார் 10.4 இலட்சம் சிறிய, பெரிய மருத்துவமனைகள் உள்ளன. பொருளாதார ரீதியாகப் பார்த்தால், 2017-இல் மருத்துவமனைகள் சுமார் 16,000 கோடி டாலர் வருவாய் ஈட்டி உள்ளன. இது 2020-இல் 28,000 கோடி டாலராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துறையில் 2000 முதல் 2017 வரை 434 கோடி டாலர் அந்நிய நேரடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2015இல் இந்தியாவில் சிகிச்சை பெற வெளிநாடுகளில் இருந்து 1.30 இலட்சம் பேர் வந்துள்ளனர். அதுவே 2016-இல் இரண்டு இலட்சமாக அதிகரித்துள்ளது.

மருத்துவத் துறையின் இப்போதைய சூழலை மாற்றவும், சுகாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கிலும் 'பிரதம மந்திரி ஜன ஆரோக்கிய யோஜனா-ஆயுஷ்மான் பாரத்' என்ற திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த செப்டம்பர் 23-ஆம் தேதி தொடக்கி வைத்துள்ளார். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, சமூக, பொருளாதார, சாதி ரீதியாகப் பின்தங்கிய 10 கோடி குடும்பங்களைச் சேர்ந்த 50 கோடி பேர் இந்தத் திட்டத்தால் பயன் அடைவார்கள். இந்தத் திட்டத்தில் 1,300 நோய்களுக்கு சிகிச்சை பெற முடியும். ஒவ்வொரு குடும்பமும் ரூ.5 இலட்சம் வரை மருத்துவக் காப்பீடு பெறமுடியும்.

இப்போதுள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களில் இருந்து இது வேறுபட்டாலும், 'அனைவருக்கும் சுகாதாரம்' என்ற இலக்கை இந்தத் திட்டத்தால் சாதிக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே. 'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தைவிட, தங்கள் மாநிலங்களில் ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டுள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் சிறந்ததாக உள்ளன என்று கூறி, இந்தத் திட்டத்தை தெலங்கானா, ஒடிசா, தில்லி, கேரளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் ஏற்க மறுத்துவிட்டன.

ஒருவர் கடும் நோய்க்கு ஆளாகி, அதிக செலவுகளால் கடனாளியாகும் நிலை ஏற்பட்டாலும்கூட, அவர் ஏழை அல்ல எனக் கூறி, இந்தத் திட்டத்தில் இணைக்க மறுப்பதால் பெருமளவிலான மக்கள் இதனால் பயனடைய முடியாத நிலை உள்ளது. எனவே, இந்தத் திட்டத்தையும் 'அனைவருக்குமான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்' என்று கூற முடியாது.

மறுபுறம், ஒவ்வோர் ஆண்டும் கல்வித் துறைக்கான அரசின் நிதி ஒதுக்கீடு குறைந்து கொண்டே வருகிறது. சுகாதாரத் துறையைவிட அதிக வேகத்தில் கல்வித் துறையின் தரம் வீழ்ச்சி அடைந்து வருகிறது. கல்வித் துறைக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2012-13-இல் 3.1 சதவீதமும், 2014-15-இல் 2.8 சதவீதமும், 2015-16-இல் 2.4 சதவீதமும், 2016-17-இல் 2.6 சதவீதமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், கல்வித் துறைக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1985-86-க்குள் 6 சதவீதத்தை ஒதுக்க வேண்டும் என கோத்தாரி கமிஷன் 1966-லேயே பரிந்துரைத்திருந்தது.

கல்வித் தரம் ஆண்டுதோறும் வீழ்ச்சி அடைந்து வருவதை 'கல்வித் தர ஆண்டறிக்கை' படம்பிடித்துக் காட்டி உள்ளது. 14 முதல் 18 வயது வரை உள்ளவர்களில் சுமார் 25 சதவீதம் பேரால், தங்கள் தாய்மொழியில் சரளமாகப் பேச முடிவதில்லை. சுமார் 57 சதவீதம் பேருக்கு, மூன்று இலக்க எண்ணை ஓர் இலக்க எண்ணால் வகுக்கத் தெரியவில்லை.

பள்ளி மாணவர்களின் இடைநிற்றலுக்கு சமூகப் பொருளாதாரக் காரணங்களும் இருக்கலாம். ஆனால், அதற்கு ஆசிரியர்களும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது. பெரும்பாலான ஆசிரியர்கள் தகுதியற்றவர்கள் என்பது மட்டுமல்ல, மாணவர்களிடம் கொடூரமாகவும் நடந்து கொள்கின்றனர். மாணவர்களிடம் ஆசிரியர்கள் நட்பு ரீதியாகப் பழகுவதில்லை என 'கல்வி தர அறிக்கை'யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சிறார் பாதுகாப்பு - ஆசிரியர்களுக்கான கையேடு' என்ற நூலை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை வெளியிட்டுள்ளது. பள்ளிகளில் அளிக்கப்படும் கொடூரமான தண்டனைகள் காரணமாகவே, சிறார்கள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடுவதுடன் வீட்டைப் விட்டும் வெளியேறி விடுகின்றனர் என அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதாரத்துக்கும் கல்விக்கும் அரசுகள் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டிய தருணம் இதுவே. இந்த இரு துறைகளும் மேம்பட்டால்தான் வறுமை ஒழிப்பு சாத்தியமாகும் என்பதை மத்திய, மாநில அரசுகள் உணர வேண்டும்.

**- பி.எஸ்.எம். ராவ்**

நன்றி : தினமணி, 9.10.2018

## ம.இல.தங்கப்பா அவர்களின் துணைவியார் தடங்கண்ணி மறைவு



தமிழறிஞர் ம.இல.தங்கப்பா அவர்களின் துணைவி தடங்கண்ணி (விசாலாட்சி) அவர்கள் 27.10.2018 அன்று மறைவுற்றார் என்பதை அறிந்த வருந்துகிறோம். அன்னாரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தினருக்கு மாபெபொக சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வாழ்க்கை ஒப்பந்த விழா

### மா.பெ.பொ.க. காஞ்சி நகரச் செயலாளர் மு.செயப்பிரகாஷ் இல்லத் திருமண விழா



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் காஞ்சிநகரச் செயலாளர் மு.ஜெயப்பிரகாஷ்- நினைவில் வாழும் காந்திமதி ஆகியோரின் மகன் ஜெ.சிவக்குமார் (எ) பாஸ்கர், காஞ்சிபுரம் வே.தணிகைவேலு-காந்தாளி இணையரின் மகள் த.நிர்மலா ஆகியோரின் இல்வாழ்க்கை இணை ஏற்பு நிகழ்ச்சி 28.10.2018 அன்று காலை 6 மணி யளவில் காஞ்சிபுரம் கீழண்டை ராசவீதி ஸ்ரீமச்சேச பெருமாள் திருமண மண்டபத்தில் தமிழ்முறைப்படி நடைபெற்றது.

மா.பெ.பொ.க.தோழர்கள் சி.பெரியசாமி, தாம்பரம் சுப்பிரமணி, சு.கஸ்தூரி, ப.வடிவேலு, வ.சுகுணா, தீ.கோபாலகிருட்டிணன், கோ.செந்தாமரை, சி.நடராசன், கீழம்பி சந்திரமோகன், வ.வேதகிரி, மா.கோதண்டபாணி, இரா.நாராயணமூர்த்தி, இரா.இராஜசேகர், ஆதிகேசவன், பூ.கா.பொன்னப்பன், முற்போக்கு சமூகநீதிப் பேரவையின் நிறுவனர் டாக்டர் விமுனாமூர்த்தி, முனைவர் மீரா, கா.கோதண்டன், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம். சேகர், தி.மு.க. தோழர்கள் கவுன்சிலர் ஜீவா, ஆர்.வி.குப்பன், பன்னீர்செல்வம், ஜெயபால், புஞ்சை வில்லவன், பூ.இராஜி, நக்கீரன், நாத்திகம் நாகராசன், திருக்குறள் பேரவையின் குறளமிழ்தன், தமிழ்முகிலன், தமிழ் இனியன், தமிழ்த் தேச மக்கள் கட்சியின் தோழர்கள் செந்தமிழ்க்குமரன், வெற்றித் தமிழன், பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்கத் தோழர் காஞ்சி அமுதன், நடராசன் ஆசிரியர், மேகநாதன், மழை காதர், சீமான், சி.பழனி, சா.கிருஷ்ணன், சங்கம் டெய்லர், சி.ஏழுமலை, துளசி இராஜா, உமாபதி (பா.ம.க.) சு.புரு ஷோத்தமன், திராவிடர் கழகத் தோழர்கள் டி.ஏ.ஜி. அசோகன், டி.ஏ.ஜி. பொய்யாமொழி, இளைவேல், வேலா யுதம், ஜெ.கவுதமன், ஜெ.அன்பழகன், ஓவியர் அசோக், இரவிபாரதி, கூரம் விசுவநாதன், ஜனதா சம்பத், எஸ்.பன்னீர் செல்வம், கா.அன்பழகன், மூர்த்தி, கருணாகரன், வேலா யுதம், ரங்கநாதன், லோக. பண்பாளன் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் திருமணத்தில் கலந்து கொண்டனர். சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- அளித்தனர்.

## வே.ஆனைமுத்து அவர்களுடன் மலேசியத் தோழர்கள் சந்திப்பு



14.10.2018 அன்று மதியம் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் ஆனைமுத்துவைத் தாம்பரத்தில் அவரது மகனின் இல்லத்தில் மலேசியாவிலிருந்து வந்திருந்த மலேசியத் தமிழர் தன்மான இயக்கத் தேசியத் தலைவர் எழுத்தாண்மை ஏந்தல் முனைவர் பெரு த. தமிழ்மணி, கழகத் தேசியத் தலைவர் மேசியா 16½ மைல்காம் எப். கந்தராஜ், அமைப்பின் பொருளாளர் பெரியார் திரு ஆகியோரும் கவிஞர் மாமணி வா.மு.சே. திருவள்ளுவரும் சந்தித்தனர். அப்போது காஞ்சி மாவட்டத் து.செ.சுப்பிரமணியும், இரா. பச்சமலையும் உடனி ருந்தனர். அப்போது பெரியார், ஒப்பற்ற மக்கள் பற்று வழியாக ஆற்றிய தன்னலமற்ற, அர்ப்பணிப்புடனான அவரது அரும் பெரும் கொள்கைகளையும் பணிகளையும் செயல்பாடுகளையும் நினைவுகூர்ந்து தோழர் வே. ஆனைமுத்து விவரித்திட அனைவரும் அவருடன் கலந்துரையாடினர். தோழர் பெரு. அ. தமிழ்மணி பத்தாயிரம் ரூபாய் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக மகிழ்வுடன் வழங்கினார்.

## திருமுருகன் காந்தியுடன் சந்திப்பு



தமிழக அரசின் பழிவாங்கும் செயல் காரணமாக நீண்டநாள்கள் சிறையில் வாடிய தமிழினப் போராளி யும் மே 17 இயக்க நிறுவனருமான திருமுருகன் காந்தி அவர்களை அதவினி சௌந்தர்யா மருத்துவமனை யில் மா.பெ.பொ.க. சார்பில் தோழர்கள் வாலாசா வல்லவன், சா.குப்பன், இரா.கு.எழில் ஆகியோர் 5.10.2018 மாலை சந்தித்து நலம் உசாவி உரையாற்றினார்.

## பெட்ரோல் டீசல் விலை உயர்வும், விளைவும்

இந்திய அரசு வெளியிட்டுள்ள நாணயத்தில் ஒரு ரூபாய் வரை எந்தப் பொருளும் (கடலை மிட்டாய் உள்பட) வாங்கமுடியாது. ஆனால் பெட்ரோல் டீசல் விலையில் பைசா பைசாவாக (7, 8, 9, 11, 13, 16...) பைசாவாக) உயர்த்தி நுகர்வோரிடம் வசூல் செய்கின்றனர். மதிப்பற்ற பைசாவிற்கு மத்திய அரசு மதிப்பு கொடுத்து விலை உயர்த்தியுள்ளது. "நாங்கள் (பா.ச.க.) ரூபாய் கணக்கில் விலையை உயர்த்தவில்லை. பைசா பைசாவாகத்தான் பெட்ரோல் டீசல் விலையை உயர்த்தியுள்ளோம்" என்று தம்பட்டம் அடிக்கும் அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் 100 சதம் பெட்ரோல் டீசல் விலையை உயர்த்தியுள்ளது.

இந்த விலை உயர்வால் விலைவாசி அதிக அளவில் உயர்ந்துள்ளது. அனைத்து விலை உயர்வும் பாதிப்பும் நுகர்வோர் தலையில் இடியாய் விழுகிறது. கையூட்டு வாங்கும் கயவர்கள்கூட விலைவாசி உயர்வைக் காரணம் கூறி, கூடுதல் கையூட்டுக் கேட்கின்றனர். கல்விக் கூடங்கள் கூட எல்கேஜி, யுகேஜி வகுப்புகளுக்கு சேர்க்கைக் கட்டணத்தை விலை உயர்வைக் காரணம் காட்டி அளவில்லாமல் வசூல் செய்கின்றனர்.

நடுத்தர மற்றும் கீழ்நிலையில் வாழும் அனைவரும் தாங்கள் விரும்பிய எதையும் வாங்க முடியவில்லை. இவர்கள் உழைக்கும் உழைப்பை மத்திய, மாநில அரசுகள் பல வழிகளில் வரியாகவும், கட்டணமாகவும், மது விற்பனை மூலமும் சுரண்டிவிடுகின்றன. இவர்கள் எப்பொழுதும் உயர்வடையக் கூடாது என்பதில் குறியாக உள்ளன மத்திய-மாநில அரசுகள். இச்சுரண்டலில் பெரும் பகுதியை மேல்பட்ட அரசியல்வாதிகள் பலவழிகளில் தமதாக்கிக் கொள்கின்றனர்.

இந்த ஆட்சிமுறை முதலாளிகளும், பணக்காரர்களும் அரசியல்வாதிகளும் மக்களைச் சுரண்டுவதற்கான தானவே இருக்கிறது என்கிற உண்மையை மக்களிடம் எடுத்துரைத்து உண்மையான மக்களாட்சி முறையை நிலைநாட்டுவோம்.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி நவம்பர்-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **பி.ரெ.அரசெழிலன்** | திருச்சி | 1000/- |
| **ப.வே.பரமசிவம்** | பரணம் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - நவம்பர்-2018

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**